**கவனிக்க.-** 2018.04.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2068 - 2018 අප්‍රේල් මස 20 වැනි සිකුරාදා - 2018.04.20

*2068 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 758 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 764 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, மே மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** :யில் அல்லது **தமிழ் மொழி** :யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 **சிங்கள மொழி** : மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** : மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் மற்றும் பிரிவினைத் திருத்தஞ் செய்தல் - நுவரெலியா மாவட்டம்

2018.03.23 ஆந் திகதிய 2064 ஆம் இலக்க இலங்கைச் சனாநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்த கீழ் குறிப்பிடப்படும் பதவிக்குரிய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2018.05.21 ஆந் திகதி வரை நீடிப்பதுடன் விவாகப் பிரிவினை வலப்பனை என திருத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

02. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் விவாகப் பிரிவு மாத்திரம் திருத்தப்பட வேண்டும் என்பதுடன் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தாழ்மையுடன் கருத்திற் கொள்ளவும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | வலப்பனை | பல்லேகம்பஹா தெற்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வலப்பனை பிரிவின் விவாக (கண்டிய / பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |

4 - 670

---

## பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிக்கான இரத்தினபுரி மாவட்ட விண்ணப்பம் கோரலினை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.03.23 ஆந் திகதிய 2064 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) வில் என்னால் பிரசுரிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்தின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம், மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் கீழ் குறிப்பிடப்படும் பிரிவில் மாத்திரம் விண்ணப்பம் கோரலினை இரத்துச் செய்கின்றேன்.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் |
|---|---|---|
| இரத்தினபுரி | இரத்தினபுரி | நவதுன் கோறளை பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி |

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஏப்பிறல் 03.

4 - 671

## பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிக்கான இரத்தினபுரி மாவட்ட விண்ணப்பம் கோரலினை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2016.07.29 ஆந் திகதிய 1978 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) வில் என்னால் பிரசுரிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்தின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் கீழ் குறிப்பிடப்படும் பிரிவில் மாத்திரம் விண்ணப்பம் கோரலினை இரத்துச் செய்கின்றேன்.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் |
|---|---|---|
| இரத்தினபுரி | இம்புல்பே | பலாங்கொடை தளவைத்தியசாலைப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி |

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஏப்பிறல் 03.

4 - 672

---

## பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிக்கான கொழும்பு மாவட்ட விண்ணப்பம் கோரலினை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.03.23 ஆந் திகதிய 2064 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் என்னால் பிரசுரிக்கப்பட்ட கொழும்பு மாவட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி தொடர்பான விண்ணப்பம் கோரும் அறிவித்தலினை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் |
|---|---|---|
| கொழும்பு | மஹரகம | அபேக்ஷா அரச வைத்தியசாலை பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி |

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஏப்பிறல் 03.

4 - 673

---

திருத்தம்

## பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் பிரிவு மற்றும் பதவியினைத் திருத்தஞ் செய்தல் - காலி மாவட்டம்

2018.03.29 ஆந் திகதிய 2065 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் பிரிவு மற்றும் பதவியினை கிரிந்திஎல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வெல்லபடபற்று பிரிவின் விவாகம் (பொது) பதிவாளர் பதவி என திருத்தம் செய்கின்றேன்.

02. அவ்விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தாழ்மையுடன் கருத்திற் கொள்ளவும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஏப்பிறல் 03.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | கோணபீனுவல | கிரிந்திஎல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வெல்லபடபற்று பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |

04 - 674

---

## உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

கலாசார அலுவல்கள் திணைக்களம்

**அரச நடனக் குழுவின் நடனக் கலைஞர் பதவியின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளல்**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் அரச நடனக் குழுவில் வெற்றிடங்களின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்படும் தகுதிகள் உள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த ஒப்பந்தத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 அளவினையுடைய தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2018.05.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நடனக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்) " என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் இந்த அறிவித்தலை www.culturaldept.gov.lk என்ற வலைத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

01. **பணியில் ஈடுபடுத்தச் செய்தல் மற்றும் பணி நிபந்தனைகள்:-**

(i) ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவதுடன் 03 வருட ஒப்பந்த காலத்தின் பொருட்டு நியமிக்கப்படும்;

(ii) சம்பளம் ரூ. 33,600/- இற்கான மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்;

02. **கல்வி மற்றும் பிற தகைமைகள் :-**

(i) ***கல்வித் தகைமைகள்:***
கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சையில் நடன பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

தேசிய நடன இடைநிலை அல்லது இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது பாத்கண்டே கல்லூரியில் நடனத்திற்கான விசாரத பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்படுகின்ற நடன பாடம் தொடர்பில் பட்டத்தினை பெற்றிருத்தல்.

(ii) ***தொழிற் தகைமைகள்:*** உரித்துடையதல்ல;

(தகுதி மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையில் தொழில்சார் தகுதிகள் மேலதிக தகைமை ஒன்றாகக் கருதப்படும்)

(iii) ***அனுபவம்:-***

அரசாங்கத்தினால் அங்கீகரித்த கலா நிலையம் ஒன்றில் அல்லது அதற்கு இணையான நிலையம் ஒன்றில் நடனக் கலைஞர் ஒருவராக 05 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல் ;

அல்லது

பரம்பரை ரீதியான நடனக் கலைஞர் ஒருவராக இருத்தல் (எழுத்து மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.).

(iv) ***உடற் தகைமைகள்:***

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலாயினும் பணியாற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள ரீதியான பொருத்தப்பாட்டு மனநிலையினைக் கொண்டதாக இருத்தல்;

(ii) 5 அடி 3 அங்குலத்திற்குக் குறையாத உயரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

v. ***ஏனைய தகைமைகள்:-***

(i) சகல விண்ணப்பதாரிகளும் சிறந்த குண ஒழுக்கத்தினையும் சிறந்த உடல் பொருத்தப்பாட்டினையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(ii) பதவியில் ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டான தகுதிகளை பூர்த்தி செய்தல் வேண்டும் என விண்ணப்பப் படிவத்தினை கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதியில் அத் தகுதிகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iii) நடன/வாத்தியம் சகல பிரிவுகளிலும் தேர்ச்சியடைந்துள்ளமை கவனத்திற் கொள்ளப்படும்.

03. **வயதெல்லை**.- விண்ணப்பப்படிவத்தினைப் பொறுப்பேற்கும் திகதியில் 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 30 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

04. **ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை**:-

* தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் பரீட்சையினதும் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

* தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமைப் படிமுறைக்கேற்ப தற்போதுள்ள வெற்றிட எண்ணிக்கையினை விட இரு மடங்கு ஆட்கள் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையிலும் தொழில் சார் பரீட்சைகளிலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமைப் படிமுறைக்கேற்ப பதவியில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

*தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை*

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | தெரிவு செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுகின்ற ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | உரித்துடையதல்ல |
| 2. குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவங்கள் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) | 35 | |
| 3. தொழிற் தகைமைகள்<br>(i) பிரபல கலைஞர்களின் கீழ் தேசிய மட்ட படைப்புக்களில் கலந்து கொண்டிருத்தல்<br>(ii) கலாசார நிலையங்கள் ஊடாகவோ அல்லது பிரபல கலைஞர்கள் ஊடாகவோ வெளிநாட்டு கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருத்தல் | 25 | |
| 4. மொழித் தேர்ச்சி | 15 | |
| 5. நேர்முகப் பரீட்சைகளில் காட்டும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

*தொழில்சார் பரீட்சை*

| புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | தேறுவதற்கான புள்ளி அளவு |
|---|---|---|
| 1. கலைத் திறமைகள் | 30 | 15 |
| 2. தாள ஞானமும் ராக பாவமும் | 20 | 10 |
| 3. தோற்றம் (உயரம்/பருமன்) | 20 | 10 |
| 4. விசேட திறமைகள் | 20 | 10 |
| 5. கோட்பாட்டு ரீதியான அறிவு | 10 | 05 |
| மொத்தம் | 100 | 50 |

05. **விண்ணப்பதாரிகளின் அடையாளம்**

விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது கல்வி மற்றும் பிற தகைமைகள் தொடர்பான விபரங்களை பிழையின்றி உட்படுத்த வேண்டியதுடன் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படுவது சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமேயாகும்.

நேர்முகப் பரீட்சையின் சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதியுடன் முறையான பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் அடையாளப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:-

1. ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;
2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

06. பதவியினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஏதேனும் ஒரு விதத்தில் வற்புறுத்தல்களை மேற்கொள்வது பதவியின் பொருட்டான தகுதியற்ற நிலை ஒன்றாக அமையும்.

07. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் ஏதேனும் ஒரு விடயம் அது தவறானது என ஒருவர் தெரிவு செய்யப்பட முன்னர் தெரிந்து கொள்ளப்பட்டால் தகுதியற்றவர் என பெயரிடவும், நியமனம் செய்ததன் பின்னர் அவ்வாறு வெளிக்கொணரப்பட்டால் பதவியிலிருந்து விலக்கவும் காரணமாக அது அமையும்.

08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒரு பொருத்தமற்ற நிலை அல்லது இசைவின்மை நிலை காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அனுஷா கோகுல பிரனாந்து,
பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கலாசார அலுவல்கள் திணைக்களம்,
08 ஆம் மாடி, செத்சிறிபாய,
பத்தரமுல்லை,
2018, ஏப்பிறல் 06.

மாதிரி விண்ணப்பபடிவம்

அலுவலகப் பாவனையின் பொருட்டு: [ ]

**கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நடனக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்) பதவியின் பொருட்டு விண்ணப்பித்தல்**

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
02. முதலெழுத்துக்களை குறிக்கும் பெயர்கள் :-----.
03. பிறந்த திகதி :-
வருடம் :-----, மாதம் :-----, திகதி :-----.
04. வயது (2018.05.31 ஆந் திகதியில்):-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
05. உயரம் : ................ அடி ................. அங்குலம்.
06. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :- [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]
07. பால் நிலை : ஆண்/பெண் :-----.
08. முகவரி :-----.
09. தொலைபேசி இலக்கம் :-----.
10. கல்வித் தகைமைகள் :-----.

(i) க. பொ. த. (உ.த.)

ஆண்டு:-----. பரீட்சை சுட்டெண்:-----.

| பாடம் | பெற்ற சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(ii) பெற்ற பட்டம் : ..........................................................................................................

| செல்லுபடியாகும் திகதி | துறை | நிறுவனம்/பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |
| | | |

(iii) தேசிய நடன இடைநிலை அல்லது இறுதிப் பரீட்சை /பாத்கண்டே கல்லூரியின் விசாரத பட்டப் பரீட்சை

| செல்லுபடியாகும் திகதி | துறை | நிறுவனம்/பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |
| | | |

11. தொழிற் தகைமைகள் :-----.

12. அனுபவம் :-----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதும் எனவும் இங்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல்களில் ஒன்று பிழையானது என தெரிவு செய்வதற்கு முன்னர் அறியக் கிடைத்தால் நான் தகுதியற்றவன் எனவும் நியமனம் பெற்றதன் பின்னர் அது தொடர்பில் வெளிகாட்டப்பட்டால் நியமனம் செல்லுபடியற்றதாகும் என்பதனையும் நான் அறிவேன்.

திகதி :-----. ------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

4-797

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை

**பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் - கட்டுநாயக்க**

***பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா (NDES) கற்கைநெறிக்கான பொறியியல் விஞ்ஞான விசேட பயிலுநர்களுக்கான ஆட்சேர்ப்பு - 2018 அணி***

கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் மேற்காட்டப்பட்ட கற்கைநெறிக்கான 2018 ஆம் ஆண்டிற்கான அணிக்கு பொறியியலின் விசேட பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்யவென இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **அனுமதிக்கான கல்வித் தகைமை :**

கீழ்வரும் தகைமைகளுடன் கூடிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்க முடியும்.

1.1 க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் மொழி (தாய்மொழி) ஆகியவற்றில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

1.2 சமுத்திரப் பொறியியல் பாடநெறி தவிர்ந்து ஏனைய அனைத்து பாடநெறிகளுக்குமென க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

சமுத்திரப் பொறியியல் பாடநெறிக்கென க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமானது.

அத்துடன்

1.3 க.பொ.த. (உ.த.) பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதிகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒரே அமர்வில் பெற்றுக்கொள்ளப்பட்ட சித்திகள்

அல்லது

1.4 க.பொ.த. (உ.த.) பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதிகவியல் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஒரே தடவையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சித்தி (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தை பிரதான பாடமாக கொண்டு பெறப்பட்ட சித்தி கட்டாயமானது)

2. **வயது**: 31.12.2018 அன்று 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

3. **காலப்பகுதி மற்றும் கற்கைநெறி அட்டவணை**:-

இக் கற்கைநெறி நான்கு ஆண்டுகளுக்குரியது. இதில் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு 18 மாத கால கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்துடன் 30 மாத கால கைத்தொழிற் பயிற்சியும் இணைந்ததாக காணப்படும்.

| | |
|---|---|
| IET இல் அடிப்படை அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | - 06 மாதங்கள் |
| தொழிற்சாலையில் அடிப்படை கைத்தொழிற் பயிற்சி | - 12 மாதங்கள் |
| IET இல் பொது அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | - 06 மாதங்கள் |
| தொழிற்சாலையில் பொது கைத்தொழிற் பயிற்சி | - 12 மாதங்கள் |
| IET இல் விசேட அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | - 06 மாதங்கள் |
| தொழிற்சாலையில் விசேட கைத்தொழிற் பயிற்சி | - 06 மாதங்கள் |

அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்,கோட்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் ஆய்வுகூட பயிற்சிகள் என்பவற்றை உள்ளடக்கியிருப்பதோடு அவை பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்படும்.

கைத்தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் நிறுவனங்களில் நடாத்தப்படும்.

கற்கைநெறியின் தொடக்கத்தில் ஆங்கில பாடநெறி ஒன்றும் நடாத்தப்படும். இதற்கு ஆங்கில பாடநெறிக்கென தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்கள் அனைவரும் பங்கேற்பது அவசியமாகும்.

4. **IET இனால் நடாத்தப்படும் கற்கைநெறிகள் பின்வருமாறு**:

A. சிவில் பொறியியல் துறை

1. சிவில் - கட்டிடம் மற்றும் கட்டமைப்பு பொறியியல்.
2. சிவில் - பெருந்தெரு மற்றும் தொடரூந்துப் பாதை பொறியியல்.
3. சிவில் - நீர் மற்றும் சூழற் பொறியியல்.

B. மின் பொறியியல் துறை மற்றும் தொடர்பாடல்

4. மின்னியல் - இலத்திரனியல் மற்றும் தொடர்பாடற் பொறியியல்
5. மின்னியல் - மின் வலு பொறியியல்

C. இயந்திரவியல் பொறியியல் துறை

6. இயந்திரவியல் - தன்னியக்க பொறியியல்
7. இயந்திரவியல் - இயந்திர பொதுப் பொறியியல்
8. இயந்திரவியல் - சமுத்திரப் பொறியியல்

a. IET இன் சமுத்திரப் பொறியியல் பாடநெறியின் தர முகாமைத்துவ முறைமை ISO 9001:2015 தர முகாமைத்துவ முறையினூடாக சான்றுப்படுத்தப்பட்டுள்ளது.

b. சமுத்திரப் பொறியியல் பாடநெறிக்கு அமைவாக STCW 95, அதனது திருத்தங்கள் மற்றும் சர்வதேச சமுத்திரவியல் நிறுவனத்தின் (IMO) மாதிரி பாடநெறி 7.04 என்பவற்றுடன் இணைந்த சமுத்திரப் பொறியியல் பாடநெறியின் செயல்பாட்டு தரத்தில் தேவைப்படும் அடிப்படை அறிவு, புரிதல்கள் மற்றும் திறமை போன்றனவற்றிற்கு முகங்கொடுக்கும் வகையில் கல்விசார் அறிவுறுத்தல்கள் மற்றும் கைத்தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்கு நிறுவனமானது கடமைப்பட்டுள்ளது.

5. **அறிவுறுத்தல்களுக்கான மொழி மூலம்**.- சகல கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களும் ஆங்கில மொழியினூடாக மேற்கொள்ளப்படும்.

6. **பயிலுநர் உடன்படிக்கை :**

6.1 தெரிவு செய்யப்பட்ட அனைத்து பயிலுநர்களும் பயிற்சி நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட கட்டுப்பட்டுள்ளனர். குறித்த ஒப்பந்தமானது பயிற்சி நிறுவனம் மற்றும் பயிலுநர் ஆகிய இரு தரப்பினதும் கடப்பாடுகளை உள்ளடக்கியிருக்கும். பாடநெறி முடிவின் போது மீளப்பெறக் கூடியதான ரூபா 5,000/- ஐ மாணவர்கள் பதிவினை மேற்கொள்ளும் போது வைப்புச் செய்தல் வேண்டும். பாடநெறிக்கான பதிவினை மேற்கொண்ட திகதியிலிருந்து இரு வாரங்களுக்குள் விலகிச் செல்லும் மாணவர்களின் வைப்புத் தொகை மீளளிக்கப்படும்.

6.2 சமுர்த்தி அட்டையின் மூலப்பிரதியுடன் கிராம அலுவலரின் கையொப்பத்துடனும் பிரதேச செயலாளரின் அனுமதியுடனும் கூடிய கடிதத்தையும் சமர்ப்பித்த சமுர்த்தி பயனாளிகள் மீளளிக்கப்படும் வைப்பிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

6.3 தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 1,500/- ஐ செலுத்துதல் வேண்டும். அதில் ரூபா 500/- பதிவுக் கட்டணமாகவும் ரூபா 1,000/- நூலக அபிவிருத்தி நிதியத்திற்குமாகவும் செலுத்துதல் வேண்டும்.

6.4 பயிற்சி காலப்பகுதியின் முடிவில் தொழில்வாய்ப்புக்கான எந்தவொரு உத்தரவாதமும் வழங்கப்படமாட்டாது.

6.5 பதிவுசெய்யப்பட்ட அனைத்து மாணவர்களும் நிறுவனத்தினால் பாடங்களுக்கென பாடநெறி காலப்பகுதியில் தீர்மானிக்கப்படும் குறைந்தபட்ச வருகையை கட்டாயம் பூர்த்தி செய்தல் வேண்டும். இத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யாத எவரும் பரீட்சை மற்றும் மதிப்பீடுகளுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதோடு பாடநெறியிலிருந்தும் வெளியேற நேரிடும்.

7. **சான்றிதழ் வழங்குதல் :**
சகல பரீட்சைகள், மதிப்பீடுகள் மற்றும் கடப்பாடுகளையும் பூர்த்தி செய்யும் நிலையில் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

8. **தெரிவு செய்யப்படும் முறை :**

8.1 முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளை கொண்டிருப்பவரும் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு உட்பட்டவரும் தகுதியுடையவராவர். கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தெரிவுகள் அமையும்.

8.2 தகுதியுடைய தேர்வுநாடிகள் உளச்சார்பு எழுத்துப்பரீட்சை ஒன்றிற்கு ஆங்கில மொழியினூடாக தோற்றுதல் வேண்டும். (தகுதி பெற்ற தேர்வு நாடிகள் முன்னதாகவே அறிவிக்கப்படுவர்.)

8.3 எழுத்துப் பரீட்சையின் உயர் புள்ளிகளினடிப்படையில், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகளே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

8.4 விண்ணப்பதாரிகள் இறுதியாக தேர்வு செய்யப்படுவது எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் புள்ளிகளின் அடிப்படையிலாகும்.

8.5 **பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் பதிவிற்கு முன்னதாக தமது சொந்த செலவில் மருத்துவ பரிசோதனை ஒன்றினை மேற்கொண்டிருத்தல் வேண்டும். (சமுத்திரப் பொறியியல் பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் பதிவிற்கு பின்னராக மீண்டுமொரு முறை தமது சொந்த செலவில் விசேட மருத்துவ பரிசோதனை ஒன்றினை மேற்கொள்ளுதல் வேண்டும்)**

9. **விண்ணப்பங்கள் :**
9.1 கல்விச் சான்றிதழ்களின் {க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.)} பிரதிகள் பாடசாலை அதிபரினால் சான்றுப்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவத்துடன் கட்டாயமாக இணைக்கப்படுதல் வேண்டும். கல்விச் சான்றிதழ்களின் பிரதிகளை கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.) சான்றிதழ்கள் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி சரிபார்க்கப்படும். இதற்கான கட்டணங்கள் பதிவுக்கென தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளால் செலுத்தப்படும்.

9.2 சகல விண்ணப்பதாரிகளும் கீழ்வரும் அடிப்படையில் பரீட்சைக்கான மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை வைப்புச் செய்தல் வேண்டும்.

(a) விண்ணப்பப்படிவமானது தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையில் ரூபா 200/= செலுத்தி பெறப்பட்டிருப்பின் ரூபா 550 ஐ வைப்புச் செய்தல் வேண்டும்.

(b) விண்ணப்பப்படிவமானது இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்பட்டிருப்பின் அல்லது வேறு ஏதேனும் வகையில் பெறப்பட்டிருப்பின் ரூபா 750 ஐ வைப்புச் செய்தல் வேண்டும்.

9.3 வைப்புச் சீட்டானது பின்வரும் விடயங்களை தெளிவாக வெளிப்படுத்துவதாக அமைதல் வேண்டும்:

(i) ***கிளைக் குறியீடு மற்றும் கணக்கிலக்கம் : 276-1-001-8-6351396.***

(ii) *பற்று அறிவுறுத்தல் :* கட்டுநாயக்க மக்கள் வங்கிக் கிளையில் காணப்படும் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் வசூலிப்பு கணக்கிலக்கம் : 276-1-001-8-6351396 இற்கு பற்று வைத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி.

9.4 விண்ணப்பப்படிவங்கள் மற்றும் மேலதிக தகவல்களை IETன் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். (www.iet.edu.lk)

9.5 விண்ணப்பப்படிவங்களை "பதிவாளர், பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம், கோவில் வீதி, கட்டுநாயக்க" என்னும் முகவரியில் ரூபா 200/= ஐ செலுத்தி நேரடியாகவோ அல்லது தபால் மூலமாயின் முத்திரையுடன் கூடிய சுய முகவரியிடப்பட்ட தபால் உறையுடன் (9" × 4") ரூபா 200/= இற்கான காசுக் கட்டளையை மேற் குறித்த முகவரிக்கு 04.05.2018 வரை அனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம். குறித்த காசுக் கட்டளையை கட்டுநாயக்க தபால் அலுவலகத்தில் மாற்றம் செய்யக்கூடியவாறு "கணக்காளர், பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம்" எனும் பெயருக்கு வரைதல் வேண்டும்.(011-2252833 / 011-2252834 / 011-2254667)

9.6 விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA) தவிர்ந்த ஏனைய தனியார் நிறுவனங்களில் இருந்து கொள்வனவு செய்ய வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

9.7 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் அதிகாரம் பெற்ற வங்கி அலுவலரினால் கையெழுத்திடப்பட்ட வைப்புச் சீட்டையும் இணைத்து, "பணிப்பாளர் / அதிபர், பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம், கோவில் வீதி, கட்டுநாயக்க" என்னும் முகவரிக்கு 31.05.2018 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2018 ஆம் ஆண்டுக்கான விசேட பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்" என குறிப்பிடுதல் அவசியமானதாகும். தாமதமான விண்ணப்பங்கள் மற்றும் நேரடியாக கையளிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9.8 ***அரசாங்க பல்கலைக்கழகங்கள் அல்லது தொழில்நுட்பக் கல்லூரிகளில் முழு நேரமாக டிப்ளோமா அல்லது பட்டத்தை பூர்த்தி செய்த அல்லது தற்போது தொடர்ந்து கொண்டிருக்கும் எவரும் விண்ணப்பிக்க தகுதியுடையோர் அல்ல.***

9.9 விண்ணப்பப்படிவங்களின் பற்றுச்சீட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9.10 விண்ணப்பப்படிவங்களை தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் பின்வரும் அலுவலகங்களிலும் ரூபா 200/= ஐ செலுத்தி 31.05.2018 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்:-

(i) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கடை, ராஜகிரிய. 011-2888782-7

(ii) கைத்தொழிற் பொறியியல் பயிற்சி நிறுவனம், 581, காலி வீதி, கட்டுபெத்தை, மொரட்டுவை. 011-2647393/ 011-2643356

(iii) தன்னியக்க பொறியியல் பயிற்சி நிறுவனம், 69/A, பேஸ்லைன் வீதி, ஒறுகொடவத்தை. 011-2572977 / 0112643356

(iv) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 10/4, மல்வத்த வீதி, பதுளுபிட்டிய, பதுளை. 055-2230644

(v) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 642, வித்தியாலய வீதி, புதிய நகரம், இரத்தினபுரி. 045-2228667

(vi) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 27ஏ, திறந்த பல்கலைக்கழக வீதி, நூபே, மாத்தறை. 041-2226958

(vii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 108/2 பீ, திவங்கபோதி மாவத்தை, கண்டி. 081-2201918

(viii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, விமான நிலைய வீதி, அனுராதபுரம். 025-2223178

(ix) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, நீர்கொழும்பு வீதி, மல்கடுவாவ, குருநாகல். 037-2223789

(x) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல 44, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 021-2222383

(xi) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 07, ஜி.எஸ். ஒழுங்கை, கல்முனைக்குடி-13, கல்முனை. 067-2229357

(xii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல.242, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05. 011-2597671/011-2587258

(xiii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல.326/2, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. 034-2224239

(xiv) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 61/5, மினுவங்கொட வீதி, கம்பஹா. 033-2232874

(xv) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, மோலவத்தை, மெதகம வீதி, மாதம்பை. 032-2248250

(xvi) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 103, நீர்ப்பாசனப் பிரதேசம், புதிய நகரம், பொலநறுவை. 027-2223023

(xvii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, கச்சேரிக் கட்டிடத் தொகுதி, மொணராகலை. 055-2276504

(xviii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, கோவில் வீதி, ஹாவாஎலிய, நுவரெலியா. 052-2223702

(xix) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 11, விகாரை வீதி, மாத்தளை. 066-2223173

(xx) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, S.W.R.D. பண்டாரநாயக்க மாவத்தை, பல்லபான, கலிகமுவ நகரம், கேகாலை. 035-2284931

(xxi) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 395, வக்வெல்ல வீதி, ஜுல்கஹா, காலி. 091-2235628

(xxii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல.39, பல்லிக்குடாவ வீதி, தங்காலை. 047-2241512

(xxiii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, மாங்குளம் வீதி, முள்ளியவளை, முல்லைத்தீவு. 021-2061012

(xxiv) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, ஏ9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி. 021-2285615

(xxv) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல.103/7, தபால் கந்தோர் வீதி, திருகோணமலை. 026-2226569

(xxvi) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 294, நொச்சிமுனை வீதி, மட்டக்களப்பு. 065-2228130

(xxvii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, பூங்கா வீதி, வவுனியா. 024-2224679

(xxviii) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 952/1, நல்லாயன் வீதி, மன்னார். 023-2223404

10. தபாலின் போது தாமதமாகும் விண்ணப்பங்கள் மற்றும் காணாமல் போகும் விண்ணப்பங்களுக்கு பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் எவ்வித பொறுப்பும் ஏற்காது. ஆகவே விண்ணப்பதாரிகள் தாமதங்களை தவிர்க்கும் வகையில் தமது விண்ணப்பங்களை குறித்த காலத்திற்கு முன்பதாகவே அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

செஹான் செனெவிரத்ன,
தவிசாளர்.
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,

இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
ராஜகிரிய.

4-564

---

**அல் ஆலிம் சான்றிதழ் பரீட்சைகள்**

I. (அ) 2013 ஆம் ஆண்டும் அதன் பின்னரும் அமுலாகும் வகையில், 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆம் திகதி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த அல் ஆலிம் பரீட்சைகளுக்கான பிரமாணங்களும் பாடத்திட்டங்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளனவென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

II. அல் ஆலிம் சான்றிதழ் பரீட்சைத் திட்டம் 2013 ஆம் ஆண்டும் அதன் பின்னரும்

**மேற்படி பரீட்சை இரண்டு மட்டங்களில் நடைபெறும்**

(1) அல் ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ் பரீட்சை
(2) அல் ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ் பரீட்சை

**மேற்படி இரண்டு பரீட்சைகளுக்குமான ஒழுங்குவிதிகளும் பொதுப் பிரமாணங்களும்**

01. மேற்படி பரீட்சைகள் கல்வி அமைச்சின் செயலாளருக்காக அவரது மதியுரைப்படி பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் வருடாந்தம் நடாத்தப்படும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் விதந்துரைகள் தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ளப்படும்.

02. அல் ஆலிம் சான்றிதழ்ப் பரீட்சை 2016 ஆம் ஆண்டிலிருந்து நடாத்தப்படுகிறது.

03. **ஊடகமொழி** : இப்பரீட்சை அரபு மொழியிலேயே நடாத்தப்படும். மொழி பெயர்ப்பு தவிர்ந்த சகல வினாக்களுக்கும் அரபு மொழியிலேயே விடையளித்தல் வேண்டும். மொழி பெயர்த்தல் வினாவுக்கு விடையளிப்பதற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் ஒன்றை மட்டும் பரீட்சார்த்தி தெரிவு செய்யக் கூடியதாக அமைந்திருக்கும்.

04. **தகைமைகள்:**

4.1 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அரபுக் கல்லூரி ஒன்றில் மூன்றாண்டுக் கற்கையைப் பூர்த்தி செய்தவர், அல் ஆலிம் முதவஸ்ஸிதா பரீட்சைக்கும், ஐந்தாண்டு கற்கையைப் பூர்த்தி செய்தவர் அல் ஆலிம் ஸானவிய்யா பரீட்சைக்கும், தோற்றுவதற்குத் தகுதியுடையவராவார்.

அல்லது

4.2 மேற்குறித்த அரபுக் கல்லூரியொன்றில் கல்வி பயிலும் மாணவன்/மாணவி, அக்கல்லூரி அதிபரினால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவர் என கருதுமிடத்து அம்மாணவன்/ மாணவி மேற்குறித்த இரு பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்குத் தகுதியுடையவராவார். மேற்படி இருசாராரும் அரபுக் கல்லூரி பரீட்சார்த்திகளாக பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

4.3 அரபுக் கல்லூரிகளில் கல்வி பயின்று கொண்டிராதோர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக அண்மையிலுள்ளஅரபுக் கல்லூரியொன்றின் ஊடாக பரீட்சைக்கு தோற்றமுடியும்.

4.4 அல் ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ்ப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் அல் ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ்ப் பரீட்சைக்கு தோற்றத் தகுதியுடையவர்களாவர்.

4.5 அல் ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ்ப் பரீட்சையில் சித்தியடையாதவர்கள் அல் ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ்ப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியாது.

05. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் இப்பரீட்சைகளுக்காக பதிவு செய்யப்பட்ட அரபுக் கல்லூரிகளுக்கு விண்ணப்பப் பத்திரங்களும் அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். விண்ணப்பப்பத்திரங்களும் அறிவுறுத்தல்களும் கிடைக்கப் பெறாத அரபுக் கல்லூரிகள் “ பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. இல. 1503, கொழும்பு” என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

5.1 விண்ணப்பங்கள் யாவும் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு ஒரு பிரதியை பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்புவதோடு மற்றைய பிரதியை விண்ணப்பம் அனுப்பும் அரபுக் கல்லூரியில் கோவைப்படுத்தி வைத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் தெளிவாகவும் பிழையின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும், காலம் கடந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் அல்லது பத்திரிகை விளம்பரம் மூலம் விண்ணப்பம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் அறிவிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த.பெ. இல. 1503,
கொழும்பு.

06. **பரீட்சைக் கட்டணம்**

6.1 முதன் முறையாகத் தோற்றும் அரபுக் கல்லூரிப் பரீட்சார்த்திகளிடம் பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. இரண்டாம் முறையாக தோற்றும் விண்ணப்பதாரர்களும் தனிப்பட்ட விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

6.2 *கட்டணம் செலுத்தும் முறை.-* உரிய தொகையை அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணமும் அது செலுத்தப்பட வேண்டிய முறையும் காலத்துக்காலம் தேவைக்கேற்ப பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்படும்.

07. பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைக்கு விண்ணப்பித்த அரபுக் கல்லூரி அதிபர்களுக்கு பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

7.1 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே அனுமதி அட்டையைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் தனது பரீட்சார்த்தி தகைமையை இழக்க நேரிடும்.

7.2 அனுமதிஅட்டையில்விண்ணப்பதாரியின்கையொப்பம்உரியஅரபுக்கல்லூரிஅதிபரினால்உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

08. **ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் :-**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் ஆவணங்களுள் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) தேசிய ஆளடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச் சீட்டு.

09. **பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் நகரங்கள்:-**

| | | |
|---|---|---|
| (i) | கிழக்கு மாகாணம் | திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று |
| (ii) | மேல் மாகாணம் | கொழும்பு, கம்பஹா, களுத்துறை, |
| (iii) | தென் மாகாணம் | காலி, மாத்தறை |
| (iv) | வடமேல் மாகாணம் | புத்தளம், குருநாகல் |
| (v) | மத்திய மாகாணம் | கண்டி, மாத்தளை, நுவரெலியா |
| (vi) | வடமத்திய மாகாணம் | அநுராதபுரம், பொலன்னறுவை |
| (vii) | ஊவா மாகாணம் | பதுளை, மொணராகலை |
| (viii) | சப்ரகமுவ மாகாணம் | மாவனல்லை, இரத்தினபுரி, கேகாலை |
| (ix) | வடமாகாணம் | வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் |

* மேல் குறிப்பிட்டுள்ள நகரங்களில் நிறுவப்படும் பரீட்சை நிலையங்ளுக்கு போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத விடத்து அவ்விண்ணப்பதாரிகள் அண்மையிலுள்ள நகரப் பரீட்சை நிலையத்துடன் இணைத்துக்கொள்ளப்படுவர். தேவையைப் பொறுத்து இந்நகரங்களில் பரீட்சை நிலையங்களை நிறுவாமலிருக்கவும், வேறு நகரங்களில் பரீட்சை நிலையங்களை நிறுவுவதற்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

10. **விடைத்தாள் மீள் பரிசீலனை:**

பெறுபேறுகள் வெளியாகி முப்பது நாட்களுக்குள் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படும் படிவங்கள் மூலம் நிறுவனத்தின் அதிபர் விண்ணப்பம் செய்தால் விடைத்தாள்களை மீள்பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு அரபுக் கல்லூரி மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும். இதற்காக கட்டணம் ஒன்று அறவிடப்படும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரம் கட்டணம் மீளளிக்கப்படும்.

11. **அல் - ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ்ப் பரீட்சை:**
*(2013 ஆம் ஆண்டும் அதன் பின்னரும்)*

***பரீட்சை பற்றிய விபரம்:-***

இப்பரீட்சை பின்வரும் ஆறு பாடங்களுக்குரிய மூன்று மணித்தியாலம் கொண்ட ஆறு வினாப் பத்திரங்களைக் கொண்டதாகும். ஆறு பாடங்களும் பின்வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1) | அல்லுகதுல் அரபிய்யா வல் அதப் - I | - | அரபு மொழியும் இலக்கியமும் - I |
| 2) | அல் குர்ஆனுல் கரீம் | - | அல்குர்ஆனுல் கரீம் |
| 3) | அல் ஹதீஸுன் நபவி | - | நபிமொழிகள் |
| 4) | அல் பிக்ஹுல் இஸ்லாமி | - | இஸ்லாமிய சட்டநெறி |
| 5) | அத்தர்பியா அல் இஸ்லாமிய்யா | - | இஸ்லாமிய ஒழுக்கவியல் |
| 6) | அத்தாரீகுல் இஸ்லாமி | - | இஸ்லாமிய வரலாறு |

*12.* **பாடத்திட்டம்**:

I அல்லுகதுல் அரபிய்யா வல் அதப் - I (அரபு மொழியும் இலக்கியமும் - I )

இதில் கருத்து வெளியிடும் ஆற்றல், எண்ணங்களையும், கருத்துக்களையும் ஒழுங்கு படுத்தும் முறை என்பன பரீட்சிக்கப்படும். கட்டுரை எழுதுதல் இலக்கணமும், மொழிப் பிரயோகம், முன் குறிப்பிடப்படாத பகுதிகளை மொழி பெயர்த்தல் என்பனவும் பரீட்சிக்கப்படும்.

1. பரிந்துரைக்கப்பட்ட பாட நூல்கள்

அ. அல் அரபிய்யது வின்னாஷிஈன் பாகம் 1, 2, 3
நூலாசிரியர்கள் : மஹ்மூத் இஸ்மாஈல் ஸீனீ, நாஸிப் முஸ்தபா அப்துல் அஸீஸ் முக்தார், தாஹிர் ஹுஸைன்

ஆ. மஜ்முஅதுந்நஹ்வ் : மீஸான் அஜ்னாஸ், தக்வீமுல்லிஸான், அல் அவாமில் ஆகிய பிரிவுகள்.

இ. முதம்மிமதுல் ஆஜுருமிய்யா : முஹம்மத் இப்னு முஹம்மத் அர்ரஈனி

ஈ. அன்னஹ்வுல் வாழிஹ் அல்மர்ஹலா அல் இப்திதாஇய்யா ஜுஸ்உ, 1, 2, 3 அலி ஜாஸிம், முஸ்தபா அமீன்

2. அல்குர் ஆனுல் கரீம்

ஜுஸ்உ அம்ம மனனம்; தஜ்வீத் முறை மற்றும் மொழிபெயர்ப்பு உட்பட அல்குர்ஆனை ஓதுதல், அல்குர்ஆன் பற்றிய பொதுவான விளக்கம் பெற்றிருத்தல் மற்றும் கருத்துச்சுருக்கமும் தஜ்வீத் சட்ட விளக்கங்களும்.

பரிந்துரைக்கப்பட்ட பாட நூல்கள்

அ. ஹிதாயதுல் முஸ்தபீத் : அஷ்ஷெய்கு மஹ்முதுல் மஹ்மூத்
ஆ. தப்ஸீர் அல்ஜலாலைன் : இமாம் ஜலாலுத்தீன் அஸ்ஸுயூத்தி

3. அல் ஹதீஸுன் நபவி - நபிமொழிகள்

* ஹதீஸ் ஒரு சட்ட மூலாதாரம் என்ற வகையில் ஹதீஸ் பற்றிய பொது விளக்கம்
* ஹதீஸ்களின் பொருள் விளக்கம்
* குறிப்பிடப்பட்ட ஹதீஸ்களை மனனமிடல்
* ஹதீஸ்களிலிருந்து சட்ட விளக்கம் பெறல் என்பன இவ்வினாப் பத்திரத்தில் பரீட்சிக்கப்படும்.

பரிந்துரைக்கப்பட்ட பாட நூல்கள்

அ. அல் அர்பஊனன்நவவிய்யா :- இமாம் நவவி (ரஹ்) அவர்கள்

ஆ. ஸாதுத் தாலிபீன் :- மௌலானா முஹம்மத் ஆஷிக் இலாஹி

4. அல்பிக்ஹுல் இஸ்லாமி (இஸ்லாமிய சட்ட நெறி)

* இஸ்லாமிய சட்டக்கலை பற்றிய அறிவும், தெளிவும்

* காலத்துக்குக் காலம் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கான சட்டத் தீர்வுகளைப் பெறும் ஆற்றல் என்பன பரீட்சிக்கப்படும்.

பரிந்துரைக்கப்பட்ட பாட நூல்கள்
மத்னு அபீஷுஜா - அல்காழி அபீஷுஜா அஹ்மத் இப்னு ஹுஸைன் அஹ்மத் அல் இஸ்பஹானி

5. அத்தர்பிய்யா அல் இஸ்லாமிய்யா (இஸ்லாமிய ஒழுக்கவியல்)

இஸ்லாமிய அற நெறிகளும், ஒழுக்க மாண்புகளும், நடைமுறைகளும் இவ்வினாப் பத்திரம் மூலம் பரீட்சிக்கப்படும்.

பரிந்துரைக்கப்பட்ட பாட நுல்கள்

அ. தஃலீமுல் முதஅல்லிம் :- புர்ஹானுல் இஸ்லாம் அஸ்ஸர்னூஜி

ஆ. ஹிஸ்னுல் முஸ்லிம் :- ஸஈத் இப்னு அலி இப்னுவஹ்ப் அல்கஹ்தானி

6. **ஆத்தாரீகுல் இஸ்லாமி (இஸ்லாமிய வரலாறு)**

ஜாஹிலியாக்காலம் பற்றிய விரிவான விளக்கம்.

முஹம்மத் (ஸல்) அவர்களது பிறப்பு முதல் வபாத் வரையான வரலாறு குலபாஉர்ராஷிதீன் - குலபாஉர்ராஷிதீன்களின் குணநலன்கள், சாதனைகள், ஆட்சிமுறை, ஆட்சிப் பரம்பல்.

பரிந்துரைக்கப்பட்ட பாடநூல் :
தாரீகுல் இஸ்லாமி - ஹஸன் இப்ராஹீம் ஹஸன்

13. **வினாப்பத்திர அமைப்பு**

ஒவ்வொரு வினாப் பத்திரமும் I, II ஆகிய இரண்டு பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

பகுதி I இல் இடம் பெறும் வினாக்கள் கட்டாயமானவை. சுருக்கமாக விடையளிக்க வேண்டிய 10 வினாக்கள் இதில் இடம் பெறும். ஒவ்வொரு வினாவுக்கும் 4 புள்ளிகள் வீதம் 40 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி II ஒரு கட்டுரை வடிவிலான வினாவினையும் ஆறு பகுதிக்கட்டமைப்பு வினாக்களையும் உள்ளடக்கியதாகும். கட்டுரை அமைப்பிலான வினாவுக்கு விடையளிப்பது கட்டாயமானதாகும். இதற்கு இருபது புள்ளிகள் வழங்கப்படும். பகுதிக்கட்டமைப்பு வினாக்கள் ஆறில் நான்கிற்கு மாத்திரம் விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவும் அ, ஆ ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதிக்கும் 5 புள்ளிகள் வீதம் ஒரு வினாவுக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்.

14. **சித்தியினைத் தீர்மானிக்கும் நியதிகள்:**

ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான மொத்தப்புள்ளிகள் 100. சித்திடையவதற்குரிய குறைந்தபட்ச புள்ளி 35 ஆகும்.

| | | |
|---|---|---|
| (அ) | 00 - 34 வரை | W |
| (ஆ) | 35 - 49 வரை | S |
| (இ) | 50 - 64 வரை | C |
| (ஈ) | 65 - 74 வரை | B |
| (உ) | 75 - 100 வரை | A |

அல் ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ்ப் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்து க.பொ.த. (சா. த.) பரீட்சையில் மொழி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்), கணிதம் உட்பட குறைந்தபட்சம் ஆறு பாடங்களிலாவது தேறியோருக்கே இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அல் ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ் வழங்கப்படும். ஆயினும் அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் தனித்தனி பெறுபேற்றுப் பத்திரங்களை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் வழங்கும்.

15. **பரீட்சை முடிவுகளை வெளியிடலும் சித்திபெற்றவர்களைத் தீர்மானித்தலும்:**

அல் ஆலிம் முதவஸ்ஸிதா பரீட்சையில் இப்பரீட்சைக்குரிய ஆறு பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர். ஏதாவது ஒரு பாடத்தில் மாத்திரம் சித்தி பெறத் தவறியிருப்பின் அவர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவார். அவர் அடுத்துவரும் இரு பரீட்சைத் தவணைகளுக்குள் குறித்த பாடப் பரீட்சைக்குத் தோற்றி, அப்பாடத்தில் சித்திபெறின் அவரும் அல் ஆலிம் முதவஸ்ஸிதா பரீட்சையில் சித்தி பெற்றவராகக் கருதப்படுவார்.

ஒரு பரீட்சார்த்தி முதவஸ்ஸிதா பரீட்சை சான்றிதழ் பெறுவதற்கு இப்பரீட்சையில் தேறியிருப்பதுடன் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குத் தோற்றி மொழி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்), கணிதம் உட்பட குறைந்தபட்சம் ஆறு பாடங்களிலேனும் தேறியிருத்தலும் வேண்டும். இவ்விரு பரீட்சைகளிலும் தேறியவர்களுக்கே பரீட்சைத் திணைக்களத்தினால் அல்ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ் வழங்கப்படும். உரிய படி பரீட்சைத்திணைக்களத்தில் விண்ணப்பம் செய்து அச்சான்றிதழைப் பெறுக்கொள்ளலாம்.

16. **அல் - ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ் பரீட்சை**
(2015ம் ஆண்டும் அதன் பின்னரும்)

**பரீட்சை பற்றிய விபரம்:**

இப்பரீட்சை பின்வரும் ஆறு பாடங்களுக்குரிய மூன்று மணித்தியாலம் கொண்ட ஆறு வினாப் பத்திரங்களைக் கொண்டதாகும். ஆறு பாடங்களும் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 7) | அல்லுகதுல் அரபிய்யா வல் அதப் - II | அரபு மொழியும் இலக்கியமும் - II |
| 8) | அல் குர்ஆன் வஉலூமுஹு | அல்குர்ஆனும் குர்ஆனிய கலைகளும் |
| 9) | அல் ஹதீஸ் வஉலூமுஹு | அல் ஹதீஸும் ஹதீஸ் கலைகளும் |
| 10) | அல்பிக்ஹுல் இஸ்லாமி வஉஸுலுஹு | இஸ்லாமிய சட்டநெறியும் அடிப்படைகளும் |
| 11) | அல் ஹழாரதுல் இஸ்லாமிய்யா | இஸ்லாமிய நாகரிகம் |
| 12) | அல் அகீததுல் இஸ்லாமிய்யா | இஸ்லாமியக் கோட்பாடுகள் |

17. **பாடத்திட்டம்**

1. ***அல்லுகதுல் அரபிய்யா வல்அதப் - II (அரபு மொழியும் இலக்கியமும் - II)***

எண்ணங்களையும் கருத்துக்களையும் தொகுத்து வெளியிடும் ஆற்றல் பரீட்சிக்கப்படும். அரபியிலிருந்து தமிழ்/ சிங்களம்/ ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதாவதொன்றில் மொழிபெயர்க்கும் ஆற்றல் பரீட்சிக்கப்படும். ஐய்னுல் ஹுதா பீஷர்ஹிகத்ரிந்நதா என்ற நூலின் தரத்திலான அரபு இலக்கண அறிவும் பரீட்சிக்கப்படும். பாடநூலில் இல்லாத பகுதிகளை மொழிபெயர்த்தலும் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் ஆகிய பிறமொழியிலிருந்து அரபுக்கு மொழி மாற்றம் செய்தலும், பாடநூலில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கியப் பண்புகள் பற்றியதான விடயங்களும் பரீட்சிக்கப்படும்.

***பரிந்துரைக்கப்பட்ட பாட நூல்கள்***

அ. அல் அரபிய்யது லின்னாஷிஈன் பாகம் 4, 5, 6 (மஹ்மூத் இஸ்மாஈல் ஸீனி, நாஸிர் முஸ்தபா அப்துல் அஸீஸ், முக்தார் தாஹிர் ஹுஸைன்)
ஆ. அல் கிராஅதுர் ராஷிதா பாகம் 3 (1-15 பாடங்கள்) அபுல் ஹஸன் அலி (நத்வி)
இ. அந்நஹ்வுல் வாழிஹ் (அல் - மர்ஹலா ஸானவிய்யா) 1, 2, 3 அலி அல் ஜாஸிம், முஸ்தபா அமீன்
ஈ. ஐனுல் ஹுதா பீ ஷரஹிகத்ரின்நதா, அஷ்ஷெய்க் உஸ்மான் அல்பன்னானி,
உ. அல் பலாகதுல்வாழிஹா (கிஸ்முல் பயான் வல்பதீஉ) அலிஜாஸிம், முஸ்தபா அமீன்

2. ***அல்குர்ஆன் வஉலூமுஹு (அல்குர்ஆனும் குர்ஆனியா கலைகளும்)***

குறிப்பிடப்பட்ட ஸூறாக்களின் உள்ளடக்கம் பற்றிய விரிவான அறிவும் குர்ஆனியக் கலைகள் தொடர்பான விளக்கமும் பரீட்சிக்கப்படும்.

***பரிந்துரைக்கப்பட்ட பாட நூல்கள்***

அ. ஸப்வதுத்தபாஸிர் - முஹம்மத் அலி அஸ்ஸாபூனி:

அல்முல்க், அல்வாகிஆ, அந்நூர், அல்ஹுஜுராத், அல்கஹ்பு, யாஸீன் ஆகிய ஸூராக்கள்.

ஆ. அத்திப்யான் பீஉலூமில் குர்ஆன்: முஹம்மத் அலி அஸ்ஸாபூனி

3. ***அல் ஹதீஸ் வஉலூமுஹு (அல் ஹதீஸும் ஹதீஸ் கலைகளும்)***

குறிப்பிடப்பட்ட பாட நூல்களில் இடம் பெறும் ஹதீஸ்களின் உள்ளடக்கம், வாழ்வில் அவற்றை செயற்படுத்தும் முறை, அதன் பயன்கள் என்பன பரீட்சிக்கப்படும். மேலும் ஹதீஸ் கலை தொடர்பான கலைச் சொற்கள், அவற்றின் விளக்கம் ஹதீஸின் பாதுகாப்புக்காக முன்னோர் மேற்கொண்ட ஆய்வுகள், பங்களிப்புகள் பற்றிய அறிவும் பரீட்சிக்கப்படும்.

*பரிந்துரைக்கப்பட்ட பாட நூல்கள்*

அ. புலூகுல் மராம்- இப்னு ஹஜர் அல் அஸ்கலானி (அத்தியாயம் தஹாரா முதல் நிகாஹ் முடியும் வரையான பகுதி)

ஆ. மிஷ்காதுல் மஸாபீஹ் - அல் இமாம் வலிய்யுத்தீன் அபூ அப்துல்லாஹ் முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் அல் கதீப் (ரஹ்) - (பின்வரும் பகுதிகள் : அல் ஈமான், அல் இஃதிஸாம் பில்கிதாபி வஸ்ஸுன்னா, அல்இல்மு, பழாஇலுல் குர்ஆன், அல் அதப், அல்பிதன், அல்மனாகிப்)

இ. தைஸீர் முஸ்தலஹில் ஹதீஸ் - மஹ்மூத் அத்தஹ்ஹான்

4. ***அல்பிக்ஹுல் இஸ்லாமி வஉஸூலுஹு (இஸ்லாமிய சட்ட நெறியும் அடிப்படைகளும்)***

குறிப்பிடப்பட்டுள்ள படநூலின் அடிப்படையில் பிக்ஹு, உஸூலுல் பிக்ஹ் சம்பந்தமான அறிவும் அதனை வாழ்வில் கையாளும் விதம் பற்றிய விளக்கமும் பரீட்சிக்கப்படும்.

*பரிந்துரைக்கப்பட்ட பாட நூல்கள்*

அ. உம்ததுஸ்ஸாலிக் வஉம்ததுன்நாஸிக் - இமாம் ஷஹாபுத்தீன் அஹ்மத் இப்னு அந்நகீப் அஷ்ஷாபிஈ

ஆ. ஷரஹுல் வரகாத் பீ இல்மி உஸூலில் பிக்ஹி - ஜலாலுத்தீன் முஹம்மத் இப்னு அஹ்மத் அல்மஹல்லி அஷ்ஷாபிஈ.

இ. தஸ்ஹீலுல் வுஸூல் இலாபஹ்மி இல்மில்உஸூல்

5. ***அல்ஹழாரதுல் இஸ்லாமிய்யா (இஸ்லாமிய நாகரிகம்)***

குறிப்பிடப்பட்ட பாடநூல்களின் அடிப்படையில் உமைய்யாக் காலம் முதல் உஸ்மானிய கிலாபத்தின் வீழ்ச்சி வரையான இஸ்லாமிய வரலாறு பற்றியும் இஸ்லாமிய நாகரீக வளர்ச்சி பற்றியும் பரீட்சிக்கப்படும்.

*பரிந்துரைக்கப்பட்ட பாட நூல்கள்*

அத்தாரீகுல் இஸ்லாமி :- இப்ராஹிம் பின் மஹ்மூத் அப்துர்ராழீ

6. ***அல் அகீததுல் இஸ்லாமிய்யா (இஸ்லாமியக் கோட்பாடுகள்)***

குறிப்பிட்ட பாட நூல்களின் அடிப்படையில் இஸ்லாமிய அகீதா பற்றிய அறிவு, விளக்கம், வாழ்க்கையில் அதன் பிரயோகம் என்பன பரீட்சிக்கப்படும்.

*பரிந்துரைக்கப்பட்ட பாட நூல்கள்*

ஜவ்ஹரதுத்தவ்ஹீத் - அல் இமாம் இப்ராஹீம் அல்லிகாஇ அல்லது
அகீததுத் தஹாவிய்யா - அல்இமாம் அபூஜஉபர் அஹ்மத் இப்னு ஸலாமா அத்தஹாவி

18. **வினாப்பத்திர அமைப்பு**

ஒவ்வொரு வினாப் பத்திரமும் பகுதி I, பகுதி II, என இரண்டு பகுதிகளை கொண்டதாக அமையும்.

பகுதி I இல் உள்ள சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். சுருக்கமாக விடையளிக்க வேண்டிய பத்து வினாக்களை உள்ளடக்கிய இப் பகுதியில் ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு புள்ளிகள் வீதம் 10 வினாக்களுக்கும் மொத்தம் 40 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி II இல் ஒரு கட்டுரை வடிவிலான வினாவையும் மற்றும் ஆறு பகுதிக்கட்டமைப்பு வினாக்களையும் உள்ளடக்கியதாகும். கட்டுரை அமைப்பிலான வினாவுக்கு விடையளிப்பது கட்டாயமானதாகும். இதற்கு இருபது புள்ளிகள் வழங்கப்படும். பகுதிக்கட்டமைப்பு வினாக்கள் ஆறில் நான்கிற்கு மாத்திரம் விடையெழுத வேண்டும். ஒவ்வொரு வினாவும் அ, ஆ ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதிக்கும் 5 புள்ளிகள் வீதம் ஒரு வினாவுக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்.

19. **சித்தி பெறுவதைத் தீர்மானிக்கும் நியதிகள்**

ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான மொத்த புள்ளிகள் 100. சித்தியடைவதற்குரிய குறைந்தபட்ச புள்ளி 40. இப்பரீட்சையின் ஆறு பாடங்களிலும் சித்தி பெற்ற ஒருவர் பரீட்சையில் சித்தி பெற்றவராவார். ஐந்து பாடங்களில் சித்தியடைந்து ஒரு பாடத்தில் மட்டும் சித்தியடையத் தவறுபவர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவர். அடுத்துவரும் இரு பரீட்சைத் தவணைகளுக்குள் நூன சித்தி பாடத்துக்குத் தோற்றிச் சித்தி பெறுவதன் மூலம் இப்பரீட்சையில் தேறியவராகலாம். தரம் வழங்குதல் கீழ்வருமாறு அமையும்:-

(அ) 00 - 39 வரை W
(ஆ) 40 - 54 வரை S
(இ) 55 - 64 வரை C
(ஈ) 65 - 74 வரை B
(உ) 75 - 100 வரை A

**சான்றிதழ்** :- அல் ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைவதுடன் பொது அங்கிலம், பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்த எவையேனும் மூன்று பாடங்களில் சித்தியுடன் க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையிலும் சித்தியடைந்தவர்களுக்கே அல் ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ் வழங்கப்படும். உரியபடி விண்ணப்பித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து உரிய சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆயினும் அல் ஆலிம் ஸானவிய்யா பரீட்சையில் வெளிவாரியாகத் தோற்றியோருக்குத் தனித்தனியாகப் பரீட்சைப் பெறுபேற்றுப்பத்திரம் பரீட்சைத்திணைக்களத்தினால் வழங்கப்படும்.

க. பொ. த. (உ.த.) பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும். அதன் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக அதற்கு தோற்றுதல் வேண்டும்.

**பரீட்சை முடிவுகளை வெளியிடலும், சித்தி பெற்றவர்களை தீர்மானித்தலும்.**

அல் ஆலிம் ஸானவிய்யா பரீட்சையில் ஆறு பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர். ஏதாவது ஒரு பாடத்தில் மாத்திரம் சித்திபெறத் தவறியவர், அவர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவர். அவர் அடுத்து வரும் இரு பரீட்சைத் தவணைகளுக்குள் குறித்த பாடத்திற்குத் தோற்றி அப்பாடத்தில் சித்தி பெறின் அவரும் அல் ஆலிம் ஸானவிய்யா பரீட்சையில் சித்தி பெற்றவராகக் கருதப்படுவர்.

20. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள இப்பரீட்சை திட்டத்தில் மொழிகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படின் தமிழ் மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளவையே சரியானவையெனக் கருதுதல் வேண்டும்.

21. இப்பரீட்சைகள் தொடர்பில் இங்கு குறிக்கப்படாத யாதேனும் விடயம் பற்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானது.

பீ. சனத் பூஜித,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
த.பெ.இல. 1503,
கொழும்பு,
2018, மாச்சு 26.

4-582

---

## இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2018

1.0 இலங்கை தகவல், தொடர்பால் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 தரம் III இலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் III இலுள்ள பதவிகளில் நியமிக்கப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

3.0 இதன் மூலம் நிரப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 911 ஆகும். நியமனம் பயன்வலுப் பெறும் தினம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் வெற்றிடங்களில் ஏதேனும் ஒரு தொகையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரத்தை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் கொண்டுள்ளார்.

4.0 நிலவும் வெற்றிட எண்ணிக்கையில் 3% வலது குறைந்த நபர்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமை பெறுகின்ற வலது குறைந்த நபர்களில் கூடிய புள்ளிமட்டத்தை அடைகின்ற 3 % மாணவர்கள் மட்டும் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளின் புள்ளிகள் முழுப்புள்ளிகளில் குறைந்த பட்சம் 50% மாவது ஆதல் வேண்டும். நியமனமொன்றுக்காக தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் விசேட மருத்துவ பரிசோதனை குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன் தனது வலது குறைந்த நிலைமையும் சம்பந்தப்பட்ட பதவியில் கடமையாற்றுவதற்கு அது தடையாக இராது என்பதையும் விசேட மருத்துவ அறிக்கை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

5.0 **சம்பளம்.**- 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 (MT-01-2016) இற்கமைய இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 3- III, 3-II, 3-I ஆம் தரங்களுக்கான மாதாந்த சம்பளத் திட்டம் ரூபா 29,840-10×300-11×350-10×560-10×660 - 48,890 ஆகும்.

**குறிப்பு**: அச் சம்பளம் தங்களுக்கு 2020.01.01 ஆந் திகதியில் இருந்தே கிடைக்கப்பெறும் . எனினும் மேற்படி சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணையின் ஏற்பாடுகளுக்கமைய சம்பளம் வழங்கப்படும்.

6.0 இப்பதவி நிரந்தரமானது. இப்பரீட்சையில் இலங்கை தகவல், தொடர்பால் தொழிநுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக பின்வரும் தகைமைகள் ஏற்புடையனவாகும்.

7.0 **தகைமைகள்.**- இலங்கை தகவல்,தொடர்பாடல் சேவையின் வகுப்பு 3 இன் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) (1) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவர்களாகவும் 35 வயதிற்குக் மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2000.05.21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1983.05.21 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருப்பவர்கள் மாத்திரம் இது தொடர்பாக விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.);

(இ) நன்நடத்தையுடையவர்களாகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்;

(ஈ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கடப்பாடுடையவர்களாக இருத்தல் வேண்டும்;

(உ) ***கல்வித் தகைமைகள்:***

(1) மொழி, கணிதம், ஆங்கில மொழி என்பன அடங்கலாக ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கல்விப் பொதுத்தராதர ( சாதாரண) தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

(ஊ) தொழிற்தகைகைள்:

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது கணினி அறிவியல்/ தகவல் தொழிநுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைக்கு உரித்தான டிப்ளோமா / உயர்தர டிப்ளோமா அல்லது அதனைவிட உயர் பாட நெறியொன்றை கற்றுப் பூரணப்படுத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி/ தகவல் தொழிநுட்பம்/தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைக்கு உரிய டிப்ளோமா பாடநெறி/ அதனை விடக் கூடிய பாடநெறி அல்லது 1500 மணித்தியாலங்களுக்குக் குறையாத பாடநெறியை கற்றுப் பூரணப்படுத்தியிருத்தல் ;

அல்லது

(இ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அவ் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனமொன்றில் இருந்து அல்லது பாராளுமன்றத்தின் சட்டத்தால் நிறுவப்பட்ட ஒரு சட்ட நிறுவனமொன்றில் இருந்து

(1) கணினி /தகவல் தொழில்நுட்பம் /தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்கு உரிய தேசிய தொழிற் தகைமை ( NVQ) ஐந்து (05) /அதை விடக் கூடிய NVQ சான்றிதழைப் பெற்றிருத்தல்;

அல்லது

(2) 1500 மணித்தியாலங்களுக்குக் குறையாத கணினி/தகவல் தொழில்நுட்பம்/தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைக்கு உரிய பாடநெறியொன்றினை கற்றுப் பூரணப்படுத்தியிருத்தல்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் உரிய தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

8.0 **பரீட்சை நடைமுறைகள்:**

8.1 பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும். இப்பரீட்சை சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

8.2 பரீட்சைக்கான பாடங்களும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே காட்டப்பட்டுள்ளன:-

| | | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|
| (1) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 100 | 2 மணித்தியாலங்கள் |
| | உளச்சார்புப் பரீட்சை | 100 | 1 மணித்தியாலம் |
| | மொத்தப் புள்ளிகள் | 200 | |

**தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப எழுத்துப் பரீட்சை:**

பரீட்சார்த்தியிடம் காணப்படும் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பொது அறிவு, இயங்கு தளம்/ மென்பொருள்/ வன்பொருள் தொடர்பான அறிவு , இணையம் மற்றும் ஏனைய தகவல் அமைப்புப் பகுப்பாய்வு, ஆக்கங்கள், பரிசோதனை, செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் ( system Analysis, Design, Testing, Implementation and Maintenance) தொடர்பான அறிவு, தரவுத்தளம் (Database) இனை உருவாக்குதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான அறிவு, கணினி வலையமைப்பு முகாமைத்துவம் தொடர்பான அறிவு, வலையமைப்பு மற்றும் மின்னஞ்சல் போன்ற துறைகள் தொடர்பான அறிவினைப் பரீட்சித்துப்பார்க்கும் கட்டமைக்கப்பட்ட மற்றும் பல்தேர்வு வினாக்களினை உள்ளடக்கியுள்ளது. அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**உளச்சார்புப் பரீட்சை:**

இவ்வினாப்பத்திரம், பரீட்சார்த்திகளின் எண் கணித ஆற்றல் , தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் என்பவற்றைச் சோதிக்கக் கூடிய வினாக்களைக் கொண்டதாக அமையும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களை கொண்டுள்ளதுடன் , எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**குறிப்பு:**
கடமை நோக்கங்களுக்காக பரீட்சார்த்திகளின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாப்பத்திரம் அமையும் . இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்த போதிலும் நியமனத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% யாவது பெற வேண்டியுள்ளதுடன், பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் 50 % யாவது பெறுதல் வேண்டும். அனைத்து எழுத்துமூல விடைத் தாளிலும் தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப்பிழை தொடர்பான பிழைகள் சம்பந்தமாக புள்ளிகள் குறைக்கப்படும். பெற்ற புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறை கண்டிப்பாக பின்பற்றப்பட்டு, போட்டிப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு நியமனங்கள் வழங்கப்படும்.

8.3 நிரப்புவதற்குத் தீர்மானித்துள்ள வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் உள்ளடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணையொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அதற்கு மேலதிகமாக பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகள் அனைவருக்கும் ஒவ்வொரு விடயத்துக்கும் பெற்ற புள்ளிகள், மொத்தப் புள்ளிகள் உள்ளடங்களான பெறுபேற்றுப் பிரதியொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தனிப்பட்ட முறையில் அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தில் பிரசுரிக்கப்படும்.

9.0 பிழையான தகவல்களுக்கான தண்டனைகள்: விண்ணப்பப்படிவங்களை நிரப்புகின்ற போது சரியான தகவல்களை வழங்குவது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும்

எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து, அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரர் சமர்ப்பித்துள்ள தகவல்கள் பிழையானவை என எப்போதாவது தெரியவருமிடத்து அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

10.0 பரீட்சைக் கட்டணம்: பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். இத்தொகையினை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் வருமானத் தலைப்பின் கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் அல்லது மாவட்ட செயலகத்திலும் செலுத்த முடியும். அது தொடர்பாக விண்ணப்பதாரியிற்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் கழறாதவாறு அதன் ஓரத்தில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் நகல் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது அவசியமாகும்) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது. காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11.0 (i) விண்ணப்பப்படிவங்கள் ஏ4 (21× 29 செ.மீ) ( சதாதாரண ஹாப் சீட்) அளவுத் தாளில்,

(அ) இலக்கம் 01 முதல் 03 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும்

(ஆ) இலக்கம் 04 முதல் இறுதி வரையான பந்திகள் ஏனைய பக்கங்களிலும் அமையக் கூடியவாறு கடதாசியின் இருபக்கங்களையும் பயன்படுத்தி, விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன், விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமே விண்ணப்பம் நிரப்புதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரிப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத, உரிய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிராத, சரியான முறையில் நிரப்பப்படாது குறைபாடுகள் கொண்டதாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப்படிவங்களை நிரப்பாது விடுவதனால் ஏற்படும் பின்விளைவுகளை விண்ணப்பதாரர்கள் பொறுப்பேற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நகல் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

(ii) இங்கு அட்டவணை 1 இற்கமைய பரீட்சைக்குத் தோற்றும் நகரம் மற்றும் நகர இலக்கம் தனது விருப்பத்திற்கேற்றவாறு ஒழுங்குமுறைப்படி முதலாவது மற்றும் இரண்டாவது தெரிவு எனக் காட்டப்படுதல் வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பித்ததன் பின்னர் நகரத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்திற்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை போதியதாக இல்லாத விடத்து இரண்டாம் தெரிவாகக் குறிப்பிட்ட நகரத்திற்கு மாற்றப்படும். அவ் இரண்டாம் நகரத்திற்கும் போதியளவு விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அருகிலுள்ள நகரமொன்றுக்கு மாற்றப்படும். எவ்வாறாயினும் அப் பரீட்சை நிலையங்கள் அனைத்திலும் அதிகமான அல்லது போதிய விண்ணப்பதாரர்கள் இல்லாதவிடத்து பரீட்சையை கொழும்பில் மட்டும் நடத்துவதற்கு பரீட்சைகள் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

11.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பிப்பார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய தினத்தில் அல்லது அத்தினத்திற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டை வழங்குவார். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் அனுப்பப்படுவது குறித்த விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஆதாரமாக அமையமாட்டாது. விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா என்பதை சோதிக்கின்ற போது தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரியவருமிடத்து அப்பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

11.2 விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 இன் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2018 ” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

11.3 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரினால் அல்லது சமாதான நீதவான் ஒருவரினால் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளர் ஒருவரினால் முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரினால் அல்லது பொலிஸ் சேவையிலுள்ள வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஒருவரினால் அல்லது வருடாந்த சம்பளமாக ரூபா 240, 360 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைப் பெறுகின்ற அரசாங்கத்தின் நிரந்தரப் பதிவியொன்றை வகிக்கின்ற அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

11.4 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, மே மாதம் 21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த.பெ. இல. 1503,
கொழும்பு.

12.0 **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பான பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ் அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களில் பின்னரும் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தங்கள் வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டினதும் உறுதிப்படுத்தப்பட்ட படிவப் பிரதிகளையும் பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் பரீட்சையின் பெயர் , விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். கொழும்புக்கு வெளியில் எனில் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கான தொலைநகல் (ஃபக்ஸ்) இலக்கத்தையும் கொண்ட உமது கோரிக்கைக் கடிதத்தை உம்மிடம் வைத்துக் கொண்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

13.0 பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;

(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

14.0 பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு பரீட்சார்த்திகள் கடமைப்பட்டுள்ளனர். அவ் ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

15.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளுக்கான பொது ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகக் கடமைப்பட்டுள்ளனர்.

16.0 இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வசனங்களுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் அல்லது பொருந்தாமை ஏதும் காணப்படுமாயின் சிங்கள மொழி அறிவித்தலே வலுவானதாக அமையும்.

கே.வீ.பி.எம்.ஜே.கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2018, ஏப்பிறல் 06.

மாதிரிவிண்ணப்பப்படிவம்

**இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 இன் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப்பரீட்சை- 2018**

Open Competitive Examination for Recruitment to Class 3 - Grade III of Sri Lanka Information & Communication Technology Service - 2018

( தரப்பட்டுள்ள கூட்டினுள் பொருத்தமான குறியீட்டை/இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடவும்)

( அலுவலகப் பயன்பாட்டிற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
( உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

* வர்த்தமானி அறிவித்தலின் பகுதி 11(ii) இணங்க விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கின்ற நகரமும் நகர இலக்கமும் குறிப்பிடப்படுதல் வேண்டும். (பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்களும் அவற்றின் இலக்கங்களும் அட்டவணை - 1 இல் காட்டப்பட்டுள்ளன.)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதலாம்தெரிவு | | |
| இரண்டாம் தெரிவு | | |

* நீர் பரீட்சைக்குத் தோற்றுவது வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4.0 க்கு அமைவாக அங்கவீனர் புனர்வாழ்வு சலுகை அடிப்படையிலா?
(இப்பகுதியில் ஆம் என குறிப்பிடுவது அங்கவீன விண்ணப்பதாரிகள் மட்டுமேயாவதுடன் இதை நிரப்புவதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலில் பந்தி 4.0 ஐ தெளிவாக வாசித்து விளங்கவும்)

ஆம் - 1
இல்லை - 2
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

1.0

1.1 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்:--------------------------------------------
(ஆங்கில கெப்பிட்டல் எழுக்களில் ) உ-ம் : GUNAWARDHNA H.M.S.K

1.2 முழுப்பெயர் ( ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் : -----------------------------------------------------
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.3 முழுப்பெயர் ( சிங்களத்தில்/தமிழில்) : -------------------------------------------------------------------
-------------------------------------------------------------------

1.4 தே.அ.அட்டை இல.: | | | | | | | | | | | | |

2.0

2.1 நிரந்தர முகவரி ( ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) .- -----.

2.2 நிரந்தர முகவரி ( சிங்களத்தில் /தமிழில்) .- -----.

2.3 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி.-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் )

3.0

3.1 பால்: ஆண்- 0 பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

3.2 பிறந்த திகதி:
ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.3 2018.05.21 ஆந் திகதியன்று வயது.-
வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

3.4 கையடக்கத் தொலைபேசி இலக்கம்.- ☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 கல்வித் தகைமைகள்:

4.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரம்:-

(i) பரீட்சைக்குத் தோற்றிய வருடமும் மாதமும்.----.

(ii) பரீட்சை இலக்கம்.----.

(iii) பெறுபேறு :-

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 01. | | 06. | |
| 02. | | 07. | |
| 03. | | 08. | |
| 04. | | 09. | |
| 05. | | 10. | |

5.0 தொழிற் தகைமைகள்

1. பயின்றுள்ள கணினிப் பாடநெறியின் பெயர்.-----.
2. பயின்ற நிறுவனம்.-----.
3. பாடநெறியைப் பூர்த்தி செய்த திகதி.------.
4. பாடநெறிக் காலம்.----.
5. அப் பாடநெறி தேசிய தொழிற்திறன் ( NVQ 5) அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறியாயின் அந்த NVQ மட்டம்
6. அப்பாடநெறி 1500 மணித்தியாலத்திற்குக் குறையாத தகவல் தொழிநுட்ப துறைக்குரிய பாடநெறியாயின் அந்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை.-----.

6.0 எப்போதாவது ஏதாயினும் ஒரு குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவரா?

ஆம் ☐ இல்லை ☐

உரிய கூட்டினுள் "✓" அடையாளம் இடவும் (விடை "ஆம்" எனின் விபரங்களைக் குறிப்பிடவும்)

-----------------------------------------------------------------------------------------

7.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டுத் தொடர்பான விபரங்கள்:-

I. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம்.-----.
II. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும்.-----.
III. செலுத்திய தொகை.-------.

| |
|---|
| பற்றுச்சீட்டினைக் கழறாதவாறு ஓர் ஓரத்தை இவ்விடத்தில் ஒட்டுக.<br>( பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனப்படலாம்.) |

8.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதாயினும் ஒரு பகுதியை நிரப்பாது விடுவதனால் மற்றும்/அல்லது தவறான முறையில் நிரப்புவதனால் ஏற்படக்கூடிய பாதகங்களை ஏற்றுக்கொள்ள உடன்படுகின்றேன். மேலும் இதிலுள்ள அனைத்துப் பகுதிகளையும் உரிய முறையில் பூர்த்தி செய்துள்ளேன் என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட .............ஆந் திகதிய.....................ஆம் இலக்கப் பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இவ்வெளிப்படுத்துகை பொய்யானது என்று நிரூபிக்கப்படுமிடத்து, நியமனம் வழங்கப்பட முன்னராயின் தகுதியற்றவராகக் கருதப்படுவேன் என்பதையும் நியமனம் கிடைத்ததன் பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும் என்பதயைும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்படும் எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

திகதி:.................. ............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

9.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி.......................................என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் அவர் என் முன்னிலையில் ...................ஆந் திகதி தனது கையொப்பத்தை இட்டார் என்பதையும் மேலும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதையும் அதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ....................... ............................
உறுதிப்படுத்துபவரின் கையயொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர்:-----.
பதவி:-----.
முகவரி:-----.
( உத்தியோபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துக) :

10.0 திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

(தற்போது அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தொடர்பாக மாத்திரம் இப்பகுதி ஏற்புடையதாகும்).

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு/ திருமதி/ செல்வி .................... என்பவர் இத் திணைக்களத்தில் நிரந்தர பதிவியொன்றில் சேவையாற்றுகின்றார் என்றும், இப்பரீட்சை அறிவித்தலின் படி இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைக் கொண்டுள்ளார் என்றும், இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியுமென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .................. ..........................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர்:-----.
பதவி:-----.
( உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துக)

**அட்டவணை**

**பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள்**

| *நகரம்* | *நகர இலக்கம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | திருகோணமலை | 14 |
| கம்பஹா | 02 | மட்டக்களப்பு | 15 |
| களுத்துறை | 03 | அம்பாறை | 16 |
| மாத்தளை | 04 | புத்தளம் | 17 |
| கண்டி | 05 | குருநாகல் | 18 |
| நுவரெலியா | 06 | அநுராதபுரம் | 19 |
| காலி | 07 | பொலநறுவை | 20 |
| மாத்தறை | 08 | பதுளை | 21 |
| அம்பாந்தோட்டை | 09 | மொணராகலை | 22 |
| யாழ்ப்பாணம் | 10 | கேகாலை | 23 |
| மன்னார் | 11 | இரத்தினபுரி | 24 |
| முல்லைத்தீவு | 12 | கிளிநொச்சி | 25 |
| வவுனியா | 13 | | |

4- 791

---

## விவசாயத் திணைக்களம்

இலங்கை விவசாயப் பாடசாலைகளில் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியினை பயில்வதற்காக 2019/2020 கற்கையாண்டிற்காக மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018

இலங்கை விவசாயப் பாடசாலைகளில் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சையானது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் 2018, யூலை மாதத்தில், சில பிரதான நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

**02. விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா**

2.1 விவசாயத் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் இலங்கை விவசாயப் பாடசாலைகளில் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறி நடாத்தப்படுகின்றது. இக்கற்கைநெறியானது இரண்டரை வருட காலப்பகுதியைக் கொண்டது. இக்கற்கைநெறியானது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இக் கற்கைநெறிக்கு தேசிய தொழிற்கல்வித் தகைமை (NVQ) தரம் 6 மட்டம் வழங்கப்படுகின்றது.

2.2 இக்கற்கைநெறியானது ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது. இப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டதன் பின்னர் திறமை மற்றும் மாவட்ட அடிப்படையில் அங்குணுகொலபெலஸ்ஸ, கரப்பிஞ்ச, குண்டசாலை, பெல்வெஹர, வவுனியா ஆகிய விவசாயப் பாடசாலைகளுக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

2.3 நேர்முகப் பரீட்சையானது தகைமை பெற்றவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை பரீட்சிப்பதற்காக மாத்திரமே நடாத்தப்படுகின்றது.

2.4 இக்கற்கைநெறியானது முழுமையாக ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும்.

2.5 இக்கற்கைநெறியைப் பூர்த்தி செய்வதற்கு விவசாயப் பாடசாலைகளில் 2 வருட பயிற்சியினை பெற்ற பின்னர் தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையின் (NAITA) மேற்பார்வையின் கீழ் 6 மாத காலத்திற்குத் தொழில் சார் பயிற்சி ஒன்றைப் பெயர் குறிப்பிடப்படும் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்வது கட்டயமாகும்.

2.6 இக்கற்கைநெறி நடாத்தப்படும் காலப்பகுதியில் விவசாயப் பாடசாலைகளின் விடுதிகளில் தங்கியிருந்து கற்கை நெறியினை மேற்கொள்ளுதல் கட்டாயமானதாகும்.

**03. கற்கைநெறிக்கு அனுமதி பெறுவதற்கு காணப்பட வேண்டிய தகைமைகள்:**

3.1 ***கல்வித் தகைமைகள்***

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலும் கட்டாயமாக திறமைச் சித்தி அல்லது அதை விட உயர்வான சித்திகளைப் பெற்றிருப்பதோடு, மேலும் ஒரு பாடத்திலும் திறமைச் சித்தி அல்லது அதை விட உயர்வான சித்தியினை பெற்றிருப்பதுடன் (இதன்படி மொத்தமாக நான்கு (04) திறமைச் சித்திகள் அல்லது அதை விட உயர்வான சித்திகள் நான்கினைப் பெற்றிருத்தல் வேண்டும்) இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த சாதாரண தரப் பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஒரே அமர்வில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தியாவது (S) இருத்தல் வேண்டும்;

அத்துடன்

க. பொ. த. உயர் தர பரீட்சையில் உயிரியல் பிரிவில் கல்வி பயின்று உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் குறைந்தது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

அல்லது

க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் கல்வி பயின்று உயிரியல், விவசாயம், இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களுக்குத் தோற்றி அதில் குறைந்தது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

அல்லது

க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் தொழில்நுட்பவியல் துறையில் கல்வி பயின்று உயிரியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியல் துறைக்கான விஞ்ஞானம் அத்துடன் விவசாயம் ஆகிய மூன்று பாடங்களுக்குத் தோற்றி அதில் ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

அல்லது

க. பொ. த. உயர் தர பரீட்சையில் தொழில்நுட்பவியல் துறையில் கல்வி பயின்று பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியல் துறைக்கான விஞ்ஞானம் அத்துடன் விவசாயம் ஆகிய மூன்று பாடங்களுக்குத் தோற்றி அதில் ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**முக்கியம்** - க. பொ. த உயர் தரப் பரீட்சையில் உயிரியல் துறை மற்றும் தொழில்நுட்பவியல் துறை ஆகிய பிரிவுகளில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பாடங்களின் சேர்க்கைகளும் தவிர்ந்த வேறேதும் பாடமொன்றினை கல்வி பயின்றிருந்தால் அது தகைமையாகக் கொள்ளப்படமாட்டாது.

விவசாயப் பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போது மாவட்ட மட்டத்தில் க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

3.2 விண்ணப்பதாரிகள் 2018.05.21 ஆம் திகதியன்று 17 வயதிற்குக் குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் வயது தொடர்பான தகைமையினைப் பூரணப்படுத்தும் விண்ணப்பதாரியின் பிறந்த தினமானது 2001.05.21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ 1993.05.21 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னராகவோ இருத்தல் வேண்டும்)

3.3 இக்கற்கைநெறியானது விவசாயச் செயற்பாடுகளுடன் தொடர்பான செய்முறைப் பயிற்சிகளை உள்ளடக்கிய கற்கைநெறி ஒன்றாகும். எனவே இக்கற்கைநெறியினைப் பயில்வதற்காக நீங்கள் தெரிவு செய்யப்பட்டால் இக்கற்கைநெறியினை தொடர்வதற்கு நீங்கள் உடலியல் மற்றும் மனநல ரீதியாகப் பொருத்தமானவர் என அரச வைத்தியர் ஒருவரினால் பெறப்பட்ட வைத்தியச் சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.4 இக்கற்கைநெறியினைப் பயில்வதற்கு மதகுருமார் தகுதியுடைவராக மாட்டார்கள்.

3.5 அரச சேவையில் தொழில் புரிபவர்கள் இப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவராகமாட்டார்.

**04. கற்கைநெறிக்காக விண்ணப்பபடிவங்கள் கோரல்**

4.1 இவ்விளம்பரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பபடிவங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தினால் அல்லது தட்டச்சு செய்யப்பட்டு அல்லது கணினி தட்டச்சு செய்யப் பட்டு 8" x 12" (A 4) அளவுள்ள தாளின் இருபக்கங்களிலும் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் 01 முதல் 09 வரையான விபரங்கள் முதல் பக்கத்தில் அடங்குதல் வேண்டும். 10 - 14 வரையிலான விபரங்கள் இரண்டாவது பக்கத்திலும், மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அடங்குமாறு விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பப்படிவமானது பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி மூலமாகவே நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை தயாரிக்கும் போது சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் அதன் தலைப்பில் பரீட்சையின் பெயரை சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி மூல விண்ணப்பதாரிகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். இவ் வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக அமையாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பபடிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். எனவே விண்ணப்பப்படிவத்தினை அனுப்புவதற்கு முன்பாகப் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவமானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமைந்துள்ளதா என்பதனையும் சகல தகவல்களும் விண்ணப்பப்படிவத்தில் சரியான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பது தொடர்பாகவும் உரிய பரீட்சைக் கட்டணமானது செலுத்தப்பட்டு அது தொடர்பான விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுவதுடன் பற்றுச்சீட்டானது விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் ஒட்டப்பட்டுள்ளதா என்பதனையும் விண்ணப்பதாரி கவனமாகப் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். மேலும் பூரணமாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதி ஒன்றையும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றையும் தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும்.

4.2 விண்ணப்பப்படிவத்தை விவசாயத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் (Website) இருந்து தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும். (www.doa.gov.lk) பரீட்சைக் கட்டணம் ரூபா 700 ஆகும். விண்ணப்பதாரி விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் மக்கள் வங்கிக் கணக்கிலக்கம்: 057100179027204 இற்கு பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் சரியான இடத்தில் பற்றுச்சீட்டின் ஒரு விளிம்பை மாத்திரம் ஒட்டி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (பற்றுச்சீட்டை வேறாக்கி எடுக்கக்கூடிய விதத்தில் ஒட்டவும்) மேலும் இப்பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக வேறு எந்த அறவீடுகளும் அறவிடப்படுவதில்லை என்பதனை தயவு கூர்ந்து அறியத்தருகின்றேன். மேலும் பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும் எக்காரணத்தைக் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணமானது மீளளிக்கப்படமாட்டாது அத்துடன் இப்பரீட்சைக்கட்டணத்தை வேறு எந்த பரீட்சைக்காகவும் மாற்றவும் முடியாது. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றையும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை இணைத்து அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

4.3 சகல விண்ணப்பப்படிவங்களும் 2018, மே மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் தாமதமாகும் அல்லது காணாமற் போகும் விண்ணப்பப்படிவங்களுக்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்காது.

4.4 விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "விவசாயக் கல்லூரிக்கான அனுமதி 2019/2020" என்னும் வாசகம் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**05. பரீட்சை நிலையங்கள்**

விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக இலங்கை விவசாயக் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சையானது பரீட்சைத் திணைக்களத்தினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் 2018, யூலை மாதத்தில் கீழே தரப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

| நகர இல. | நகரம் |
|---|---|
| 1 | அனுராதபுரம் |
| 2 | பதுளை |
| 3 | மட்டக்களப்பு |
| 4 | கொழும்பு |
| 5 | காலி |
| 6 | யாழ்ப்பாணம் |
| 7 | கண்டி |
| 8 | குருநாகல் |
| 9 | மாத்தறை |
| 10 | திருகோணமலை |
| 11 | வவுனியா |
| 12 | இரத்தினபுரி |
| 13 | அம்பாந்தோட்டை |
| 14 | கிளிநொச்சி |

குறிப்பிட்ட பரீட்சை நிலையமொன்றுக்குப் போதியளவு எண்ணிக்கையான பரீட்சாத்திகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பில் தெரிவான பரீட்சை நிலையம் அல்லது பரீட்சார்த்திகள் விண்ணப்பித்த நகரத்திற்கு அண்மையிலுள்ள வேறு ஒரு பரீட்சை நிலையம் அவர்களுக்கு வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம்/ நகரங்களைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. மேலும் குறிப்பிடப்பட்டுள்ள சகல நகரங்களிலும் அல்லது பெரும்பாலான நகரங்களில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்கு போதுமான விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து பரீட்சையினைக் கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்குப் பரீட்சை ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுப்பார்.

06. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிகளிடம் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதாவது ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

**07. பரீட்சை முறைமை**

7.1 எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் நேர அட்டவணை கீழே தரப்பட்டுள்ளன.

| பாடம் | காலம் |
|---|---|
| முதலாம் வினாத்தாள் (01) விவசாயம் (100 புள்ளிகள்) | 1 மணித்தியாலம் |
| இரண்டாம் வினாத்தாள் (02) விவேகப் பரீட்சை (100 புள்ளிகள்) | 1 மணித்தியாலம் |

மேலே தரப்பட்டுள்ள பாடங்களுக்கான பாட விதானம் கீழே தரப்பட்டுள்ளது.

**1. விவசாயம்**

இவ்வினாப்பத்திரமானது, க. பொ. த. (சாதாரண தர) விவசாயப் பாடத்தின் பாடவிதானத்திற்கு அமைவாகவும் விவசாயத் துறையுடன் தொடர்பான பொதுவான விடயங்களை உள்ளடக்கியதாகவும் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க வினாக்களை கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**2. விவேகப் பரீட்சை**

இவ்வினாப்பத்திரமானது, ஒழுங்கமைப்பு, தொடர்பு காணல், ஊகித்தல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்களை மதிப்பிடும் விதத்தில் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க வினாக்கள் 50 இனைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

7.2 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளுக்கு அமைவாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்கு உட்பட்ட, விண்ணப்பப்படிவங் களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பாக உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினைச் சரியான முறையில் இணைத்து, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக அது

தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் பிரசுரிக்கப்படும். இப் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் தமக்கான பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சை கிளையிற்கு அறியப்படுத்தல் வேண்டும். இவ்விதம் அறியப்படுத்தும் போது விண்ணப்பதாரி தோற்றவுள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியினை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் வசிப்பவராயின் மேலே கோரப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை விரைவாக பெற்றுக் கொள்ள முடியுமான விண்ணப்பதாரியின் தொலை நகல் (Fax) இலக்கமொன்றையும் குறிப்பிட்டு கோரிக்கை கடிதமொன்றினை பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலை நகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்த பின்னர் அது தொடர்பாக அறியப்படுத்தல் மிகவும் பயனுள்ளதாக அமையும். இவ்வறியப்படுத்தலை மேற்கொள்ளும் போது பரீட்சை திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதாவது தகவல் ஒன்றினை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சை கட்டணத்தை செலுத்தியமையுடன் தொடர்பாக பற்றுச் சீட்டின் பிரதி, விண்ணப்பப்படிவத்தினை தபாலில் அனுப்பும் போது பெறப்பட்ட பதிவுத் தபாலிற்கான பற்றுச் சீட்டு ஆகியவற்றை தயார் நிலையில் தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும்.

7.3 விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படுவதானது அவர் குறித்த பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமைகளை பூரணப்படுத்தியுள்ளார் என்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என ஒருபோதும் கருதப்பட முடியாது.

7.4 விண்ணப்பப்படிவத்திலும்,பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதும் நிறுவனம் ஒன்றிலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்தியின் ஒப்பமானது நிறுவனத்தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரச பாடசாலை அதிபர் ஒருவரால், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், பிரிவிற்கு பொறுப்பான கிராம அலுவலரால், சமாதான நீதவான் ஒருவரால், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், வருடத்திற்கு திரட்டிய சம்பளமாக ரூபா. 2,40,360/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால், பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது பிரதான மதகுரு ஒருவரினால், ஏனைய மத வழிபாட்டுத்தளம் ஒன்றிற்கு பொறுப்பான பிரதான மதகுரு அல்லது விஷேட நிலையில் உள்ள மதப்போதகர் ஒருவரினால் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

7.5 விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றும் முதல் தினத்திலேயே தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.6 பரீட்சையினை நடாத்தல், பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படல் வேண்டும். அத்துடன் இச்சட்ட திட்டங்களை மீறும் விண்ணப்பதாரிகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியவராவார்.

7.7 இலங்கைப் பரீட்சைத் திணைக்களமானது விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொண்ட புள்ளிகள் தொடர்பான விபரத்தினை விண்ணப்பதாரிகளின் முகவரிக்கு அனுப்பி வைக்கும். பரீட்சார்த்தியொருவருக்கு இவ் எழுத்து மூல பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அளித்தல் அல்லது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுதல் போன்றவற்றின் காரணமாக அவர் தகைமையுடையவர் எனக் கருத்திற் கொள்ள முடியாது. ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பரீட்சையின் எந்நிலையிலுமோ இந்நியதிகளுக்கு அமைவாக தகைமையற்றவர் எனக் கண்டறியப்பட்டால் அவரின் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.8 எழுத்துப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது இவ்விரு பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு அரசினால் எந்தவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

**08. தெரிவு செய்யப்படும் முறை**

8.1 குறித்த வருடத்தில் சகல விவசாயப் பாடசாலைகளுக்கும் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரிகளைக் கொண்டுள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் விவசாயப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். அதன் பின்னர் குறித்த மாவட்டத்தின் விண்ணப்பதாரிகளிலிருந்து போட்டிப் பரீட்சையில் முதலாவது மற்றும் இரண்டாவது பாடங்களில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் உயர் திறமை காட்டியுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர். அவ்வாறான தெரிவின் போது கீழ் காணும்

விடயங்களும் கருத்தில் எடுக்கப்படும்.

8.2 மாவட்ட அடிப்படையில் மாணவர்களை தெரிவு செய்யும் போது க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டமே குறித்த விண்ணப்பதாரியின் மாவட்டமாக கருதப்படும். க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டத்தின் இலக்கத்தை கண்டறிந்து விண்ணப்பப்படிவத்தில் 5 வது இலக்க வினாவினை பூர்த்தி செய்யவும். இதற்காக இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இணைப்பு 01 இனை பயன்படுத்தவும்.

8.3 எழுத்து மூலப் பரீட்சையில் விவசாயம் மற்றும் விவேகப் பரீட்சை ஆகிய இரு வினாத்தாள்களிலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார். சித்தியடைந்தவர்களின் பட்டியலின் மாவட்ட மட்ட தெரிவானது விண்ணப்பப்படிவத்தின் 5 வது இலக்க வினாவிற்கான மறுமொழியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அதன்போது க. பொ. த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் பிரிவில் அல்லது தொழில்நுட்பவியல் துறையில் கற்று ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்திப் பெற்றுள்ளதுடன் போட்டிப் பரீட்சையில் இரு பாடங்களிலும் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு ஏற்ப கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தவர்கள் முன்னுரிமை அடிப்படையில் முதலில் தெரிவு செய்யப்படுவர். குறித்த மாவட்டமொன்றில் அவ்வாறு சித்தியடைந்தவர்கள் இல்லாதவிடத்து அல்லது அவ்வாறான விண்ணப்பதாரிகள் போதியளவு காணப்படாதவிடத்து மாத்திரம் அம்மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளின் தொகைக்கு பொருந்தும் வகையில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரு பாடத்தில் அல்லது இரு பாடங்களில் சித்தியடைந்த, மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதாரிகளில் போட்டிப் பரீட்சையில் மிகத் திறமையாக சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர். இத்தெரிவு கட்டாயமாக 7.1, 7.2 இல் குறிப்பிட்டபடி மாவட்ட அடிப்படையிலும் போட்டிப் பரீட்சையில் காட்டிய திறமையின் அடிப்படையில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையில் மேற்கொள்ளப்படும்.குறித்த வருடத்தில் ஒவ்வொரு விவசாயப் பாடசாலைக்கும் அனுமதிக்கப்படும் மாணவ,மாணவியர் தொகை அப்பாடசாலைகளில் ஆண்/பெண் விடுதி வசதிக்கேற்பவும், பயிற்சி வசதிக்கேற்பவும் தீர்மானிக்கப்படும். எனவே மாணவர் தெரிவின் பொது போட்டிப் பரீட்சையின் இரண்டு பாடங்களிலும் பெற்றக் கூட்டுப்புள்ளிகளின் வெட்டுப்புள்ளி மட்டம் குறித்த மாவட்டத்தில் ஆண் பெண் விண்ணப்பதாரிகளிடையே வேறுபடும். ஏதாவதொரு மாவட்டமொன்றில் போதியளவு தகுதியுடைய மாணவர் தொகை காணப்படாதவிடத்து பாடசாலைகளின் அனுமதியை பூரணப்படுத்துவதற்காக தேவையான எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் ஏனைய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

8.4 மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கருத்திற் கொண்டு போட்டிப் பரீட்சையில் இரு பாடங்களிலும் கூடிய கூட்டுப் புள்ளிகளைப் பெற்ற குறித்த அளவான விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அழைக்கப்படுவர். அவர்களின் கல்விச் சான்றிதழ்களையும் ஏனைய சான்றிதழ்களையும் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் தங்களது சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. விவசாயப் பாடசாலைகளுக்குத் தெரிவு செய்யப்படும் எண்ணிக்கையை விட அதிகளவான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**09. "குசுமா லக்ஸ்மி கருணாதிலக்க" ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் எழுத்து மூல போட்டிப் பரீட்சையில், விவசாயம் மற்றும் விவேகப்பரீட்சை ஆகிய வினாத்தாள்களில் அதிகூடிய கூட்டுப் புள்ளியினைப் பெறும் பயிற்சியை மேற்கொள்ளும் பெண் விண்ணப்பதாரி ஒருவருக்கு மேற்படி புலமைப்பரிசிலானது அதன் விதிகளுக்கு அமைவாக 2 வருட காலத்திற்கு வழங்கப்படும். புலமைப்பரிசிலைப் பெற்றவருக்கு குண்டசாலை விவசாயக் கல்லூரியில் பயில சந்தர்ப்பம் வழங்கப்படும். இப் புலமைப்பரிசின் வருடாந்தப் பெறுமதி ரூபா 10,000/- ஆகும்.

**10.** சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் வெளியிடப்படும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது ஒவ்வாமைகள் காணப்படுகின்றது என கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எச். பீ. தயாமெனிக்கே சரத்சந்ர,
விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்காக.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
2018, ஏப்பிறல் 05.

**இணைப்பு இல. 01**

**மாவட்டங்களும் அவற்றிக்கான இலக்கங்களும்**

(8.2 பந்திக்கு ஏற்புடையதாகும்)

| மாவட்ட இல. | மாவட்டம் |
|---|---|
| 01 | அனுராதபுரம் |
| 02 | பதுளை |
| 03 | மட்டக்களப்பு |
| 04 | கொழும்பு |
| 05 | காலி |
| 06 | யாழ்ப்பாணம் |
| 07 | கண்டி |
| 08 | குருநாகல் |
| 09 | மாத்தறை |
| 10 | திருகோணமலை |
| 11 | வவுனியா |
| 12 | இரத்தினபுரி |
| 13 | ஹம்பாநதோட்டை |
| 14 | கம்பஹா |
| 15 | களுத்துறை |
| 16 | மாத்தளை |
| 17 | நுவரெலியா |
| 18 | மன்னார் |
| 19 | முல்லைத்தீவு |
| 20 | அம்பாறை |
| 21 | புத்தளம் |
| 22 | பொலன்னறுவை |
| 23 | மொனராகலை |
| 24 | கேகாலை |
| 25 | கிளிநொச்சி |

மாதிரி விண்ணப்பப் படிவம்

**விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி - 2019/2020**
**விவசாயக் கல்லூரிகளுக்கு அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை - 2018**

(Competitive Examination for Admission to Sri Lanka School of Agriculture - 2018
Higher National Diploma in Agriculture Production Technology (2019/2020))

(அலுவலக உத்தியோகத்திற்கு மாத்திரம்)

1.

| பரீட்சைக்கு தோற்றும் நகரம் | அதன் இலக்கம் |
|---|---|
| 1ஆம் தெரிவு ........................ | ........................ |
| 2ஆம் தெரிவு ........................ | ........................ |

(வர்த்தமானி அறிவித்தலின் 1 வது பந்திக்கு அமைவாக)

2.

பரீட்சைக்கு தோற்ற விரும்பும்
மொழி மூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்.)

3.

பால்:
ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

4.

க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு
முதன் முறையாக தோற்றிய பாடசாலை
அமைந்துள்ள மாவட்டம் ......................
..........

மாவட்ட
இலக்கம்
...............

(8.2 பந்திக்கு ஏற்ப இணைப்பு: இல. 01 ஐப் பார்க்க.)

5.

| | |
|---|---|
| க. பொ. த. (உ.த.) இல் உயிரியல் /தொழில்நுட்பவியல் பிரிவில் தோற்றி சித்தி பெற்றுள்ள பாடங்களின் எண்ணிக்கை (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)<br>ஓர் அமர்வில் மூன்று பாடங்கள் - 3<br>ஓர் அமர்வில் இரண்டு அல்லது ஒரு பாடம் - 2 | சித்தியடைந்த பாட எண்ணிக்கைக்கேற்ப உரிய இலக்கம்<br><br>................................ |

*(3.1 பந்திக்கு அமைவாக)*

6. (அ) i. முழுப்பெயர் (ஆங்கில Capital எழுத்தில்) :- .......................................................................................
உதாரணம்: (HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA)

ii. இறுதியில் வரும் பெயர் முதலிலும் மிகுதிப் பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு :-
உதாரணம்: (GUNAWARDENA H. M. S. K) :.......................................................................................

iii. முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :.......................................................................................
.......................................................................................

7. i. முகவரி : .......................................................................................
.......................................................................................

ii. பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை அனுப்ப வேண்டிய முகவரி :.......................................................................................
.......................................................................................

(ஆங்கில Capital எழுத்தில்) .......................................................................................

iii. தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் :- i. கையடக்க | | | | | | | | | | |

ii. நிரந்தர | | | | | | | | | | |

8. (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி :
.........................................................................
.........................................................................

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (தமிழில்):
.........................................................................

(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (ஆங்கிலத்தில்) : .................................................................

9. தேசிய ஆளடையாள அட்டை இல: | | | | | | | | | | | | |

10. பிறந்த திகதி
ஆண்டு: | | | | | மாதம்: | | | திகதி: | | |

11. 2018.05.21 ஆந் திகதி அன்று வயது :
வருடங்கள் : | | | மாதங்கள்: | | | நாட்கள்: | | |

12. கல்வித் தகைமைகள் (இப்பகுதியை பூரணப்படுத்த முன் வர்த்தமானி அறிவித்தலை கவனமாக வாசித்தல் வேண்டும்.):-----.

(அ) வர்த்தமானி அறிவித்தலின் 3.1 ஆம் பந்திக்கு ஏற்ப க.பொ.த. (சா.த.) பரீட்சையில் விண்ணப்பதாரி சித்தியடைந்த ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள்:-

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ் | | |
| | | 2. கணிதம் | | |
| | | 3. விஞ்ஞானம் | | |
| | | 4. | | |
| | | 5. | | |
| | | 6. | | |
| | | 7. | | |
| | | 8. | | |
| | | 9. | | |
| | | 10. | | |
| | | 11. | | |

(ஆ) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியற் பிரிவில்/தொழில்நுட்பவியல் பிரிவில் தோற்றினீரா?:-

உயிரியல் பிரிவு ☐

தொழில்நுட்பவியல் பிரிவு ☐

(தேவையான இடத்தில் "✓" அடையாளமிடவும்)

(இ) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள்

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

(உ) மேலேயுள்ள தகைமைகளை உறுதிப்படுத்த சான்றிதழ்களின் நிழற் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவும். (மூலப் பிரதியை அனுப்பத் தேவையில்லை).

13. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் (தமிழில்) :.........................................................................................
.........................................................................................

14. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரங்கள் :

14.1 பற்றுச்சீட்டு வழங்கப்பட்ட திகதியும் கிளையும் : ..............................................................

> பற்றுச்சீட்டின் மேல் விளிம்பை மாத்திரம் இங்கு பசையால் ஒட்டுதல் வேண்டும்.
> அதன் நிழற் பிரதியொன்றை கட்டாயமாக தம்வசம் வைத்துக் கொள்ளவும்.

**பரீட்சார்த்தியின் பிரகடனம்**

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். நான் க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகவும் தமிழ், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றிற்கு திறமைச் சித்தியும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்தியும் உயர் தரத்தில் உயிரியற்பிரிவு/தொழில்நுட்பவியல் பிரிவில் பயின்று வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட தகைமைகளை பெற்றுள்ளேன் எனவும் உறுதியளிக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் கண்டறியப்படுமிடத்து நான் இப்போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையினை இழப்பதுடன் இலங்கை விவசாயப் பாடசாலைக்கு தெரிவு செய்யப்படுவதற்கு பொருத்தமற்றவனாவேன் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சையினை

நடாத்தல், பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் சட்ட திட்டங்களுக்கு உடன்படுகின்றேன் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :.......................................

..........................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

**கல்வித் தகைமைகளையும் கையொப்பத்தையும் உறுதிப்படுத்தல்**

(திணைக்களத் தலைவர் ஒருவரால், அரச பாடசாலை அதிபர் ஒருவரால், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், பிரிவிற்கு பொறுப்பான கிராம அலுவலரால், சமாதான நீதவான் ஒருவரால், சத்தியப் பிரமாண ஆணையாளர் ஒருவரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், வருடத்திற்கு திரட்டிய சம்பளமாக ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால், பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது பிரதான மதகுரு ஒருவரினால், ஏனைய மத வழிபாட்டுத் தளம் ஒன்றிற்கு பொறுப்பான பிரதான மதகுரு அல்லது விசேட நிலையில் உள்ள மதப்போதகர் ஒருவரினால் இவ்விண்ணப்பப்படிவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.)

மேலே கையொப்பம் இட்ட திரு./திருமதி/செல்வி ...................................... என்பவரை நான் நன்றாக அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் வர்த்தமானி அறிவித்தில் குறிப்பிடப்பட்டுள்ள க.பொ.த. (சா.த.), க.பொ.த. (உ.த.) தகைமைகளைப் பெற்றுள்ளார் என வர்த்தமானி அறிவித்தல்களையும் கல்விச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை பரீட்சித்து அத்தாட்சிப்படுத்துகின்றேன். மேலும் உரிய பரீட்சை கட்டணங்களை செலுத்தியுள்ளார் என்பதனையும் அதற்கான பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி : .............................
பெயர் :.............................
பதவி :.............................
முகவரி :.............................

*4-750*